விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 08 சனிக்கிழமை (24.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 310

## ஒரே நாளில்
# +866
## தொற்றாளர்கள்
### இலங்கையில் நாளொன்றில் அதிகபட்ச எண்ணிக்கை

(கொழும்பு)
இலங்கையில் நேற்று மட்டும் 866 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இது நாளொன்றில் பதிவான அதிகபட்ச தொற்றாளர் எண்ணிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. (23ஆம் பக்கம் பார்க்க)

## சவேந்திர சில்வாவின் அமெரிக்காவுக்கான பயணத் தடையை நீக்கக் கோருக
### அரசிடம் சஜித் வலியுறுத்து

(கொழும்பு)
இலங்கையின் இராணுவத் தளபதியும் பாதுகாப்புத் தலைமை அதிகாரியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மீதான அமெரிக்காவின் பயணத் தடையை நீக்கும் கோரிக்கையை அரசாங்கம், அமெரிக்க அரசாங்கத்திடம் முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.
எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 23

## வவுனியாவில் 24 நபர்களுக்கு கொரோனா

(வவுனியா)
வவுனியா வேலங்குளம் விமானப்படை முகாமில் அமைக்கப்பட் 23


## யாழில் மூவருக்கு கொரோனா உறுதி

(யாழ்ப்பாணம்)
யாழ். கொரோனா ஆய்வுகூட பரிசோதனைகளின் அடிப்படையில் நேற்று மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வட 23

## கொழும்பின் பல பகுதிகளில் ஊரடங்கு அமுல்

(கொழும்பு)
கொழும்பு தெமட்டகொட, மருதானை பொலிஸ் பிரிவுகளில் உடன் அமுலாகும் வகையில் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மறு அறிவித்தல் வரை ஊரடங்கு 23

### பொதுமக்கள் அக்கறை செலுத்த வேண்டும்
# கொரோனா சமூகத்தில் வேகமாகப் பரவுகின்றது
### தொற்று நோயியல் பிரிவு எச்சரிக்கை



(கொழும்பு) கொரோனா வைரஸ் இலங்கையில் சமூகத்துக்கிடையில் வேகமாகப் பரவி வருகின்றது. பொதுமக்கள் இது தொடர்பில் அக்கறையுடன் இருக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவ வல்லுநர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மருத்துவ வல்லுநர் சுதத் சமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரை அடையாளம் காணும் வகையில் பி.சி.ஆர் சோதனைகள் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பேலியகொட கொத் 23

## 20ஐ பாதுகாக்க தேரர்களை புறந்தள்ளிய ராஜபக்ஷ அரசு

21ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பல்வேறு கொள்ளையுடன் தொடர்புடைய நால்வர் கைது
### 10 பவுண் நகை, மோ.சைக்கிள், ஹெரோயின் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழில் பல்வேறு நகை கொள்ளைச் சம்பவங்களோடு தொடர்புடைய நால்வர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கொடிகாமம், சாவகச்சேரி, கோப்பாய், 23

### நாடு நெருக்கடியிலிருந்தாலும்
## ஊரடங்கை அமுல்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை
### அரசாங்க தகவல் திணைக்களம்

(கொழும்பு)
கொரோனா தொற்று காரணமாக நாட்டில் நிலவும் நெருக்கடியான சூழலில், நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பித்தல் 23

## 20க்கு கை தூக்கிய அரவிந்தகுமாரை தூக்கினார் மனோ

(கொழும்பு)
20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் தமிழ் முற்போக்கு கூட்ட 23

## 20ஐ ஆதரித்த எதிரணியின் 8 பேருக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்குக
### சஜித் அணியின் பொதுச் செயலருக்கு கடிதம்

(கொழும்பு)
அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியைச் சேர்ந்த 8 உறுப்பினர்களுக்கு எதிராகவும் உடனடி நட வடிக்கை எடுக்கும்படி அக்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப் 23

### மாநகர சபை பதவியிலிருந்து
## மயூரனை நீக்குவதற்கு இடைக்காலத் தடை

(யாழ்ப்பாணம்)
மகேந்திரன் மயூரனை யாழ். மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதற்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் நேற்று வெள்ளிக் 23

## கொரோனா நோயாளர்களுக்கு
# 3, 500 படுக்கைகளுடன் 30 மருத்துவமனைகள் தயார்
## சுகாதார அமைச்சர் பவித்திரா

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களை அனுமதிப்பதற்கு ஏதுவாக 3 ஆயிரத்து 500 படுக்கைகளுடன் 30 வைத்தியசாலைகள் நாடெங்கும் தயார் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்,

நாட்டில் கொரோனா தொற்று நோய் நெருக்கடி தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன் நாளொன்றுக்கு சுமார் 8 ஆயிரம் கொரோனா பரிசோதனைகளை முன்னெடுக்கக்கூடிய வளம் சுகாதார அமைச்சிடம் தற்போது உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-03)

## பிறந்த தினத்தை முன்னிட்டு
# நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு வாழ்த்து கூறிய பிரதமர்

(யாழ்ப்பாணம்)

81 ஆவது பிறந்த தினத்தை நேற்று கொண்டாடிய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நேற்று நண்பகல் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது இருவரும் பொதுவான விடயங்களையிட்டுப் பேசிக்கொண்ட போதிலும், அரசியல் விவகாரங்கள் பேசப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-03)

# 100 போத்தல் சாராயத்துடன் வதிரி சந்தியில் ஒருவர் கைது

(கரணவாய்)

பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது முச்சக்கர வண்டி ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 180 மில்லி லீட்டர் அளவுடைய 100 அரச சாராயப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன.

நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி றுவான் பெரேராவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து உப பொலிஸ் பரிசோதகர் சாமல் தலைமையிலான குழுவினர்- நேற்று வெள்ளிக்கிழமை (23) முற்பகல் வதிரிச் சந்திப் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது முச்சக்கர வண்டி ஒன்றில் அனுமதிப்பத்திரம் இன்றி கொண்டு செல்லப்பட்ட 180 மில்லி லீட்டர் அளவுடைய 100 சாராயப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-03,60)

# யாழில் நேற்றும் 321 பேருக்கு கொரோனா பரிசோதனை
## எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (23) 321 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்றுக்கள் இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடமாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்ட மாதிரிகளில் குறித்த பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ம-03,18)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி றொசான் தவபாலன் அவர்களின் மகள்

அமரர்

ஆன்சரண்யா றொசான் தவபாலன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 1998.12.06 மறைவு 2020.10.22

(4450)

பாடசாலை நலன்புரிக் கழகம்

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்


# 200 போத்தல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களுடன்
## வரணியில் இளைஞர் கைது

(கரணவாய்)

வரணிப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் ஆறு போத்தல் கசிப்பு, 200 போத்தல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று வெள்ளிக்கிழமை(23) காலை மேற்படி பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாக கொடிகாமம் விசேட பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட அப்பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-03,60)

## ஒட்டிசுட்டான் பகுதியில்
# நோயாளர் காவு வண்டியினை மோதித்தள்ளிய காட்டு யானை

(முல்லைத்தீவு)



முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரிவுக்குட்பட்ட ஒட்டிசுட்டான் பகுதியில் நோயாளர் காவு வண்டியினை காட்டு யானை மோதித் தள்ளியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

மல்லாவி வைத்தியசாலையிலிருந்து நோயாளர்களை ஏற்றிக்கொண்டு மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான வீதியூடாக மாஞ்சோலை வைத்தியசாலை நோக்கி நோயாளர் காவு வண்டி பயணித்துக் கொண்டிருந்த சமயத்தில் ஒட்டிசுட்டான் காட்டுப்பகுதியில் நோயாளர் காவு வண்டியினை காட்டுயானை தாக்கியுள்ளது.

யானையின் தாக்குதலில் நோயாளர் காவு வண்டி பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் நோயாளர் காவு வண்டியில் பயணித்த எவருக்கும் எவ்வித உயிராபத்துகளும் நிகழவில்லை

இவ்விபத்து சம்பவம் தொடர்பில் ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-03,250)

# முல்லைத்தீவுப் பகுதியில் காணி சுவீகரிப்பு நிறுத்தம்
## தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில் சமல் ராஜபக்ச இணக்கம்

(முல்லைத்தீவு)

வடக்கு-கிழக்கில் மகாவலி அதிகார சபையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்புக்களை நிறுத்துவதென அமைச்சர் சமல் ராஜபக்ச இணக்கம் தெரிவித்துள்ளார். தமிழ் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களிற்கும், அமைச்சரிற்குமிடையிலான சந்திப்பின்போது இந்த இணக்கப்பாடு ஏற்பட்டது.

தமிழ் கட்சிகளின் சார்பில் - தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரன், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மேய்ச்சல் தரையில் சிங்களவர்களிற்கு காணி வழங்கப்படுவதால் ஏற்படும் கேடுகளை தமிழ் மக்கள் பிரதிநிதிகள், சிவில் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர். ஆனால், சிங்கள சிவில் பிரதிநிதிகள் அதை அடியோடு நிராகரித்து தம்மிடம் காணி உரிமை உள்ளதாக காண்பித்து, நீண்டகாலமாக தாம் அங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதாக தெரிவித்தனர்.

இரு தரப்பிலும் நீண்ட வாதப்பிரதிவாதங்கள் நடந்ததால், இதில் முடிவற்ற தன்மை ஏற்பட்டது.

இதையடுத்து, இந்த விவகாரத்தை ஆராய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் செம்மலை தொடக்கம் கொக்கிளாய் வரையான காணிகளை மகாவலி அதிகாரசபையிடம் கையளிக்குமாறு, கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளருக்கு அண்மையில் உத்தரவிடப்பட்ட விவகாரம் குறித்து ஆராயப்பட்டது.

அந்த காணிகளை கையகப்படுத்த வர்த்தமானி அறிவித்தல் அடுத்த ஒரிரு நாட்களில் வெளியாகவிருந்தது.

இது குறித்து ஆராயப்பட்ட போது, அந்த காணி சுவீகரிப்பை தற்போதைக்கு நிறுத்த உத்தரவிடுவதாக சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இந்த விவகாரத்தை அடுத்த கட்டமாக ஆராய்ந்து முடிவெடுப்பதாக தெரிவித்தார். (ம-03)


வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் 3அறைகளுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

(4484)

தொடர்பு : 077 444 9119

மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு (4284)

077 340 5951

e-mail : engchelvam@gmail.com

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
08 • 03 • 1954

மறைவு
26 • 09 • 2020

## அமரர். மாணிக்கம் சண்முகநாதன்

[நிர்வாகி, புதிய உயர் கல்லூரி, யாழ்ப்பாணம்]

கடந்த 26.09.2020 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் மாணிக்கம் சண்முகநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.10.2020) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 26.10.2020 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் வீட்டுக்கிரியைகள் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் இந்த கிரி யைகளில் கலந்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றி அவரது ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்க வருகை தருமாறு அழைக்கின்றோம்.

குறிப்பு:- அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து எமது ஆறாத்துயரை பகிர்ந்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, அவரை அஞ்சலித்து உரைத்தவர்கள், கடிதம், மின்னஞ்சல், தொலைபேசி, பத்திரிகை மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் எம்மோடு எம் துயரில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

"லக்ஷ்மி"
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.
T.P 021 225 5607, 077 315 1358

C-567

# தனி சிங்கள ஆட்சி அமைப்பதாக தம்பட்டம் அடித்த அரசாங்கம்

## முஸ்லிம்களின் ஒத்துழைப்பின்றி '20' ஐ நிறைவேற்ற முடியவில்லை



"(கொழும்பு)

தனி சிங்கள ஆட்சியமைப்பதாகக் கூறி இனவாத பிரசாரங்கள் மூலம் மக்களை ஏமாற்றி வெற்றி பெற்ற அரசாங்கம் தற்போது முஸ்லிம் உறுப்பினர்களின் ஆதரவுடனேயே 20 ஐ நிறைவேற்றிக் கொண்டது."

பணத்திற்காகவும் பதவிக்காகவும் காட்டிக் கொடுக்கும் உறுப்பினர்கள் சஜித் அணியிலேயே உள்ளார்கள் என்பதை நாம் தேர்தலுக்கு முன்னரே மக்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளோம் என்று மக்கள் விடுதலை முன்னணியில்(ஜே.வி.பி.) பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜே.வி.பி.தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய அரசாங்கம் பௌத்த மக்கள் மத்தியில் ஏனைய மதங்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டி தனி சிங்கள ஆட்சியமைப்பதாக அந்த மக்களை ஏமாற்றி தேர்தல்களில் வெற்றி பெற்றது. ஆனால் தற்போது ஹக்கீம், றிசாத் ஆகியோரின் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடனேயே 20 ஐ நிறைவேற்றிக் கொண்டுள்ளது.

உண்மையில் அரசாங்கத்திற்கு 20 ஐ நிறைவேற்றிக் கொள்வதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படவில்லை. பங்காளிக்கட்சிகளுடன் இணைத்து ஆளுந்தரப்பில் 150 உறுப்பினர்கள் உள்ளனர்.

அவற்றில் சபாநாயகரை தவிர்த்தால் 149 உறுப்பினர்கள். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. எனவே அரசாங்கத்திற்கு 148 வாக்குகள் மாத்திரமே காணப்பட்டது. அது மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்ல.

மூன்றில் இரண்டுக்கு 3 வாக்குகளே தேவைக்கப்பட்ட போதிலும் சஜித் தரப்பில் 8 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்து அரசாங்கத்தை சுலபமாக காப்பாற்றி விட்டனர்.

பதவிக்காகவும் பணத்திற்காகவும் காட்டிக்கொடுக்கும் உறுப்பினர்கள் சஜித் தரப்பிலேயே உள்ளனர் என்பதை நாம் ஆரம்பத்திலேயே மக்களுக்கு தெரிவித்துள்ளோம். எனவே இனியாவது இனவாதத்திற்குள் சிக்கி ஏமாறாமல் சிந்தித்து செயற்படுமாறு நாம் மக்களுக்கு வலியுறுத்துகின்றோம் என்றார். (நி-7)

### சொல்வதைச் செய்வார் ஜனாதிபதி



(கொழும்பு)

எமது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ சொல்லுவதை செய்பவர்,செய்வதை சொல்லுபவர் ஆகையால் தான் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறினார் இன்று அதனையும் செய்து காட்டியுள்ளார் என விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், எமது ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை தற்பொழுது நிறைவேற்றி வருகிறார். பொதுத் தேர்தல் நிறைவடைந்தவுடன் 20 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக கூறினார். அதனையும் நிறைவேற்றினார்.

அவரினால் வழங்கப்படுகின்ற வாக்குறுதிகள் அனைத்தையும் எதிர்வரும் காலங்களில் நிறைவேற்றுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# வைத்திய சேவைக்கு கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா நகரை அண்டிய பிரதேசங்களில் படுக்கையில் உள்ள வயோதிபர்களை சேவை அடிப்படையில் மருத்துவம் பார்ப்பதற்கு வைத்தியர்களின் உதவியை வவுனியா மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் சிரேஷ்ட பிரஜைகளின் சங்க தலைவர் தெரிவிக்கையில்,

வவுனியா நகரை அண்மித்த பகுதிகளில் படுக்கையில் உள்ள வயோதிபர்களை மாதத்தில் ஒரு தடவை சேவை நோக்கத்துடன் அவர்களின் வீடுகளில் சென்று மருத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கு வைத்தியர்களின் தன்னார்வ சேவையினை எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்தார்.

இச் சேவைக்கு தாதியர்களின் உதவியும் எதிர்பார்ப்பதாகவும் மாதத்தில் ஒரு தடவை வைத்தியர்களும் தாதியர்களும் இவ்வாறாக எம் முதுசங்கங்களின் நலன்சார்ந்து சேவையில் ஈடுபடவும் அழைத்து நிற்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இத் தன்னார்வ சேவையில் ஈடுபடவுள்ள வைத்தியர்களும் தாதியர்களும் (077) 861 3101 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். (ஜ-4-5-299)

# தனிநபரிடம் அனைத்து அதிகாரங்களும் குவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றி 12 மணிநேரத்திற்குள்ளாகவே அரசாங்கம் அனைத்து விதமான அதிகாரங்களையும் தனிநபர் ஒருவரிடத்தில் குவிப்பதை முன்னிறுத்திய செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்துவிட்டனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாட்டினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளுக்கு அமைவாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் தலைமையின் கீழேயே நிதி தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்ற யோசனை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதன்படி அதற்கான தலைவர் பதவிக்கு எனது பெயரே முன்மொழியப்பட்டிருந்தது. எனினும் இன்று காலை பாராளுமன்ற நிலையியல் கட்டளையை மாற்றி, இந்த தெரிவுக்குழுவின் தலைமைப்பதவியை தமது வசமாக்கிக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சித்தது. எனினும் நாம் வாக்கெடுப்பொன்றை நடத்தி, அதனை எமது வசமாக்கிக்கொண்டோம் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# கொரோனா தொடர்பான தரவுகளை அரசாங்கம் மூடி மறைக்கிறது

## சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)

கொரோனா தொடர்பான அரசாங்கத்தின் உண்மையான தரவுகளை வெளிப்படுத்த வேண்டும். தரவுகளை மறைப்பதால் பாரிய அனர்த்தம் ஏற்படும் அபாயம் இருக்கின்றது.

அத்துடன் சமூக பரவல் ஏற்படும் அபாயம் இருப்பதை ஏற்றுக்கொண்டு அதனை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கொரோனா சுகாதார நெருக்கடி தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

கொவிட் தொற்று கொத்தணியாக நாட்டில் பல பிரதேசங்களில் இருந்து பரவி வருகின்றது.

இவ்வாறான கொத்தணிகள் சமூக மட்டத்துக்கு பரவும் அபாயம் இருப்பதாக அரசாங்க வைத்தியர் சங்கம் தெரிவித்திருக்கின்றது. ஆனால் அரசாங்கம் அதனை மறைத்து வருகின்றது.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டியசிலஆலோசனைகளை கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் தெரிவித்து வந்தோம்.

ஆனால்அரசாங்கம்அதனை நகைச்சுவைக்கு எடுத்துக்கொண்டு அரசியல் ரீதியில் விமர்சித்து வந்தனர்.

அத்துடன் நாங்கள் அன்று தெரிவித்த விடயங்களை விமர்சித்த அரசாங்கம் தற்போது அதனை உணர்ந்து செய்ய ஆரம்பித்திருக்கின்றனர்.

இவர்களின் காலதாமதத்தினால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. கொரோனாவை கட்டுப்படுத்துவதை விட அரசியல் நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்தனர்.

மேலும் நாட்டில் இரண்டாவது அலையாக மீண்டும் தலைதூக்கி இருக்கும் கொரோனாத் தொற்று கொத்தணியாக வியாபித்து பல கொத்தணிகள் உருவாகும் அபாயம் இருப்பதாகவும் கொத்தணிகளின் ஆரம்பத்தை அறிந்துகொள்ள முடியாமல் இருப்பதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன் கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் சந்தேகத்துக்குரியவர்கள் அதிகரித்துச் செல்கின்றனர். இவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை செய்து பெறுபேற்றை பெற்றுக் கொள்ள காலதாமதம் ஏற்படுகின்றது.

இதனால் தொற்றாளர்கள் மேலும் அதிகரிக்கும் நிலையே இருக்கின்றது. அதேபோன்று பி.சி.ஆர்.மாதிரிகள் பரிசோதனைக்காக குவிந்திருப்பதாக தெரிய வருகின்றது.

அதேநிலையில் பி.சி.ஆர். பரிசோதனை இன்று வியாபாரமாக மாறி வருகின்றது எனவும் அவர் இதன்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரலாற்று துரோகம் இழைத்துள்ளனர்

**(கொழும்பு)**

**இருபதாம் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முழு இலங்கையருக்கும் வரலாற்றுத் துரோகம் இழைத்துள்ளதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.**



இருபதாம் திருத்த சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், "ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு இருபதாம் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமல்லாமல் முழு இலங்கையருக்கும் வரலாற்றுத் துரோகம் இழைத்துள்ளனர்.

இதில் 18 ஆம் 19 ஆம் 20 ஆம் திருத்த சட்டம் என மூன்றுக்கும் ஆதரவாக வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். இவர்களுக்கு இந்த சட்டமூலங்களில் என்ன உள்ளது என்றாவது தெரியுமா? என எனக்கு தெரியவில்லை.

இவர்களின் தேர்தல் பிரசாரங்களை எடுத்துப் பார்த்தால் முழுவதும் இனவாதம் பேசியே வாக்கு சேகரித்தனர்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்தால் இலங்கை மியன்மாரை போன்று மாறும் என கூறினர். இன்று எந்த முகத்தை கொண்டு மீண்டும் மக்கள் முன் செல்வார்கள்.

இவர்கள் இந்த அரசுக்கு வழங்கிய இந்த அதிகாரம் மூலம் விசேடமாக கிழக்கில் தொல்பொருள் செயலணி போன்று பல வழிகளில் பறிபோகவுள்ள எமது காணிகளுக்கும் சிங்கள குடியேற்றங்களுக்கும் எமது உரிமைகளுக்கும் என்ன தீர்வை வழங்கப்போகிறார்கள்" என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# புலிகள் மீதான தடை தொடர வேண்டும்; மேன்முறையீடு செய்யத் தீர்மானம்



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பில் இருந்து நீக்குவது குறித்து பிரித்தானிய பி.ஓ.ஏ.சி. ஆணைக்குழுவின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.**

அத்தோடு இது குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு பதிவை இட்டுள்ளார்.


அதில் இலங்கை விடுதலைப் புலிகளை தோற்கடித்து அதன் மிருகத்தனமான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

ஆனால், விடுதலைப்புலி பயங்கரவாதத்தின் எச்சங்கள் உலகம் முழுவதும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. மற்றும் எந்தவொரு நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன.

விடுதலைப் புலிகள் மீதான தடையை பிரித்தானிய அரசு நீக்கும் என்று நம்புகிறேன்' என பதிவிட்டுள்ளார். (நி-7)

# கொரோனா கட்டுப்பாடுகள் சட்டபூர்வம் இல்லை

## சபையில் சுமந்திரன் சாடல்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பாக அரசாங்கத்தினால் செயற்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் எவையும் சட்டபூர்வமாக செயற்படுத்தப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய அவர் சட்டபூர்வமாக கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் கொரோனா தொடர்பான புதிய சட்டங்களை உருவாக்குவதற்கான பாராளுமன்றை மீளக் கூட்டுமாறு வலியுறுத்தினோம்.

கடந்த வாரம் நான் செயலாளர் நாயகத்திற்கு ஓர் சட்ட வரைபை கையளித்துள்ளேன். அதனை, அரசாங்கம் பார்க்க முடியும். அவை தொடர்பான சட்டங்களை உருவாக்க முடியும். மாற்றங்களைச் செய்ய முடியும்.

ஆனால், மிக முக்கியமானது நீங்கள் அவற்றைச் செயற்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார். (ஜ-4)

# '20' ஐ தவிர்க்க மைத்திரிக்கு முதுகெலும்பு இருந்தது

## திஸ்ஸ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**இலங்கையின் பலவீனமான மற்றும் தோல்வியான ஜனாதிபதியாக இருந்தாலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு வாக்களிக்காமல் தவிர்க்க முதுகெலும்பு இருந்ததாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.**

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பிரச்சினைகள் இருந்தாலும் அவர் தலையிட்டு நிறைவேற்றிய அந்த திருத்தச் சட்டத்திற்காக குரல் கொடுத்தமை வரவேற்கத்தக்கது.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ள பாரதூரமான விடயத்தை கவனத்தில் கொண்டு, அதற்கு ஆதரவாக வாக்களித்தால், தனது அரசியல் மரணித்து போய்விடும் என்பதை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புரிந்து கொண்டிருந்தார் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

**சிங்கள இணையத்தளம் ஒன்றிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.** (ஜ-4)

# கார்-மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் காயம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி-நுணாவில் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் ஏ-9 வீதியில் நேற்றுக் காலை காருடன்-மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏ-9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் குறுக்கு ஒழுங்கை ஒன்றினுள் திரும்ப முற்பட்ட வேளை காருடன்மோதி இவ்விபத்து இடம்பெற்றது.

இவ்விபத்தில் மட்டுவில் தெற்கு நுணாவில் பகுதியைச் சேர்ந்த ச.கஜேந்திரன் (வயது-34) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# பதிவுகளை மேற்கொண்டபின் ஆலயத்திற்குள் செல்ல அனுமதி



(யாழ்ப்பாணம்)
தற்போது நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றினைக் கட்டுப்படுத்தும் முகமாக வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தினால் அனைத்துத் தரப்பினரும் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாக தனித்தனியாக சுற்றறிக்கைகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் ஆலயங்களில் பூசை வழிபாடுகளின் போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பான சுற்றறிக்கைக்கு அமைய நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ளும் அடியவர்கள் தமது பதிவுகளை மேற்கொண்டு, முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியை பின்பற்றியே ஆலயத்திற்குள் சென்று பூசை வழிபாடுகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆலயத்தின் வெளி வீதியிலிருந்து ஆலயத்துக்குள் நுழையும் அனைத்து பக்தர்களும் பதிவுகளை மேற்கொண்டு உடல் வெப்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒரே நேரத்தில் குறிப்பிட்டளவு எண்ணிக்கையான பக்தர்கள் மட்டுமே ஆலயத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.(5-4-33)

# ஆக்கம் கோரல்

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அந்த வகையில் மீசாலை பொதுநூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான கதை கூறல் போட்டி, பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களுக்கான கவிதைப் போட்டி மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு, இயற்கை விவசாயம், ஆயுர்வேத மருத்துவம் மற்றும் உள்நாட்டுக் கைத்தொழில் தொடர்பான கட்டுரைப்போட்டி மற்றும் வீட்டுத்தோட்டப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னராக மீசாலை பொது நூலக நூலகரைத் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார். (5-4-30)




# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான ஒரு தொகுதி மணல் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் மணல் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக்கொள்ளும் மணலை அன்றைய தினம் உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# வீட்டுத்திட்டமும் இல்லை விடுதியும் இல்லை
# அந்தரிக்கும் சுகாதாரத் தொழிலாளர்கள்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு விடுதி வசதிகளை நகரசபை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு விடுதி அமைக்கவென கடந்த காலத்தில் சபையால் நிதி ஒதுக்கப்பட்டது.

குறித்த 7 மில்லியன் ரூபாய் முத்திரைத் தீர்வை வருமான நிதியில் இருந்து சாவகச்சேரி - உதயசூரியன் கிராமத்தில் உள்ள நகரசபைக் காணியில் 4 விடுதிகளை முதற்கட்டமாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகாதாரத் தொழிலாளர்கள் நகரின் நலனுக்காக பாடுபடுவர்கள். அவர்களின் நலன் தொடர்பாக நகரசபை சிந்திக்க வேண்டும்.

கடந்த காலத்தில் உதயசூரியன் கிராமத்தில் சுகாதாரத் தொழிலாளர்களின் 28 விடுதிகள் இருந்தன.

ஆனால் தற்போது 4 விடுதிகள் மாத்திரமே காணப்படுகின்றன. அவையும் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன் சுகாதாரத் தொழிலாளர்களின் விடுதியில் குடிநீர் மற்றும் மின்சார வசதி ஆகியனவும் ஏற்படுத்தப்பட வேண்டும். உரிய வசதி வாய்ப்புகள் இன்மையால் சுகாதாரத் தொழிலாளர்களின் பிள்ளைகள் நோய் வாய்ப்படும் நிலை காணப்படுகிறது.

கடந்த காலத்தில் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டும் பின்னர் வீட்டுத்திட்டத்தை நம்பி விடுதி கட்டும் விவகாரம் கைவிடப்பட்டிருந்தது.

தற்போது விடுதியும் இன்றி வீட்டுத்திட்டமும் இன்றி சுகாதாரத் தொழிலாளர்கள் அல்லல்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)

# உலக புள்ளிவிபர தினம்



(யாழ்ப்பாணம்)
உலக புள்ளிவிபர தினத்தை ஒட்டி கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலக புள்ளிவிபர அலுவலகத்தால் வெளியிடப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட புள்ளிவிபரங்கள் அடங்கிய தொகுப்பு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன் ஆகியோருக்கு புள்ளிவிபர பிரிவினரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இவ் உலக புள்ளிவிபர தினம் ஐக்கிய நாடுகளின் புள்ளிவிபர ஆணையகத்தின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டு, உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளிற்கும் ஒரு முறை கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் முதன் முதலாக 2010 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் புள்ளிவிபர ஆணையகத்தினால் இவ் வருடம் மூன்றாவது உலக புள்ளிவிபர தினமானது "நம் பத்தகுந்த தரவுகளுடன் உலகை இணைத்தல்" என்னும் தொனிப் பொருளில் கொண்டாடப்படுகிறது. (5-4-60)



**தேசிய மர நடுகை வாரத்தையொட்டி சங்கானை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் அராலி மேற்கு மற்றும் அராலி மத்தி பகுதிகளில் நேற்று 5 ஆயிரம் பனம் விதைகள் நாட்டி வைக்கப்பட்டன. இதில் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள், முத்தமிழ் சனசமூக நிலைய நிர்வாகத்தினர், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:- கஜிதன்)**

# கேதாரகௌரி விரதம்

(குப்பிழான்)
குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் ஆலய வருடாந்த கேதார கௌரி விரத பூஜை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 21 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய கௌரி விரத பூஜை வழிபாட்டு நிகழ்வில் தினசரி காலை 9.30 மணியளவில் பூசைகள் ஆரம்பமாகும் எனவும் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கௌரி நூல் வழங்கலும் இடம்பெறும் எனவும் மேற்படி ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (5-4-18)

# மஞ்சளில் கலப்படம்; மூவர் கைது

(கொழும்பு)

மஞ்சளுடன் அரிசிமாவை கலந்து விற்பனை செய்து வந்த ஆலையொன்று முற்றுகையிடப்பட்டு பாவனைக்கு உதவாத 82 கிலோ மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



கண்டி அரச புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய வியாழக்கிழமை பிற்பகல் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

சுற்றிவளைப்பின் போது மஞ்சளுடன் கலப்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை அரிசியும் அதனை மாவாக்கப் பயன்படுத்தப்பட்ட அரைக்கும் இயந்திரமும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

# சுற்றிவளைப்பில் 219 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின் போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 219 பேர் கைது செய்யப்பட்டனர். மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின் போது குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் வழங்கியுள்ள அறிவுறுத்தலின் பிரகாரம் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## NOTICE
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS) WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

**POST OF TECHNICAL ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 01**

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned post under OTS – AHEAD Operation from suitably qualified persons up to 06.11.2020 .

Applicants are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for further details

**Registrar**

# பொது அறிவித்தல்

## மாநகரசபை யாழ்ப்பாணம்
## பாதீடு-2021

யாழ்.மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான பாதீடு (வரைபு) 2020.10.24 தொடக்கம் 2020.11.06 ஆம் திகதி வரை

- யாழ்.மாவட்டச் செயலகம்
- யாழ்.பிரதேச செயலகம்
- நல்லூர் பிரதேச செயலகம்
- யாழ். மாநகர சபை -பொதுசனத் தொடர்பு பகுதி
- யாழ்.பொது நூல் நிலையம்
- நவீன சந்தை-வாடிக்கையாளர் சேவை நிலையம்

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ் வரைபு பாதீட்டினை பரிசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள் முன்மொழிவுகளினை எதிர்வரும் 2020.11.06 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாநகரசபை செயலகத்தில் எழுத்து மூலம் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர் மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

(சி-574)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 20 புனித மரியாள் வீதி வரிமதிப்பீட்டு இலக்கம் 39 என்னும் ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் தோமெய் பெண் இராசம்மா எனும் பெயரில் வரிமதிப்பீட்டு பதிவேட்டில் காணப்படுகிறது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் ஆதனம் தொடர்பாக 1986 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட உறுதிகள் மற்றும் தோம்புகள் தொடர்பான பதிவுகள் இல்லை என்பதுடன் 1988.01.30 ஆம் திகதியன்று பிரசித்த நொத்தாரிசு எம்.எம்.மன்சூர் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3123 ஆம் இலக்க உறுதியில் குறித்த ஆதனம் பிலிப்பு செபஸ்தியாம்பிள்ளை அல்லது இரத்தினம் பெண் ஆசீர்வாதம்மா சம்பூரணம் என்பவருக்குச் சொந்தமாக இருந்ததாக கூறப்பட்டுள்ளதுடன் குறித்த இரத்தினம் பெண் ஆசீர்வாதம்மா இறந்ததன் பின்னர் தற்போதைய உரித்தாளர்களின் தந்தையான செபஸ்தியாம்பிள்ளை அல்பிரட் அல்லது துரைசிங்கத்தை வந்தடைந்ததாக கூறப்பட்டுள்ளது.

குறித்த 3123 ஆம் இலக்க உறுதியில் தாயுறுதி விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இவ்வாதனம் 30.01.1988 ஆம் திகதி பர்னாந்து அடைக்கலமும் பெண் மரியபுஸ்பமும் கன்னையா இரவீந்திரனும் பெண் அன்ரனியம்மாவும் அல்பிரெட் அமிர்தநாதர், அல்பிரெட் செபமாலைதாஸ், அல்பிரெட் அன்ரனிதாஸ், அல்பிரெட் தேவதாஸ் ஆகியோர் அதே இலக்கத்தில் வசிக்கும் தமது சகோதரனாகிய அல்பிரட் ஸ்ரனிலாஸ் என்பவருக்கு நன்கொடையாக உறுதி எழுதிக்கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த 3123 ஆம் இலக்க உறுதியில் ஆதன விஸ்தீரணம் தொடர்பில் காணப்பட்ட தவறு தொடர்பில் 25.06.2020 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 10881 ஆம் இலக்கத்தில் ஓர் வெளிப்படுத்தல் உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஜே/85 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்த "பராயடி" நில.பரப்பு 1 குளி 16.41 இதில் சொரியலாக 1/4 பங்கு மறு பங்காளருடன் நிந்தப்படுத்தி கொண்டபடி நில அளவையாளர் திரு.எஸ்.கே.சிவானந்தன் அவர்களால் 16.10.2019 ஆம் திகதி 4961 ஆம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நில அளவைப்படத்தினூடாக அளந்து துண்டு 1 என சுட்டியதன்படி குளி 8.05

கிழக்கு:- சிலுவைராசா பெண் மரியம்மாவினதும் மறுபேரினதும் ஆதனம்
வடக்கு:- வைத்தி செபமாலையும் மறுபேரினதும் ஆதனம்
மேற்கு:- வி.செபஸ்தியாம்பிள்ளையினதும் மறுபேரினதும் ஆதனம்
தெற்கு:- ஒழுங்கை இதடங்கலும்

தற்போது அல்பிரட் ஸ்ரனிஸ்லாஸ் என்பவர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய தனது அற்றோனித் தத்துவ பத்திரத்தினூடாக விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு / இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அல்பிரட் ஸ்ரனிஸ்லாஸ் எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துள் கொள்கின்றேன்.

இம்மானுவல் ஆனோல்ட்
முதல்வர் மாநகரசபை.

(சி-573)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 12 சூரி.செவ் 11 ல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. மின்னிணைப்பாளர்.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/043 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 16 ½ செவ் 9 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. ஆசிரியை.<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்.<br>தொ.இ: G/1343 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 18 ¾ செவ் 1 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/045 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 25 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: க.பொ.த. உ.த.<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: G/1412 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 66 ½ செவ் 1 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. அரச உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி பெண்<br>தொ.இ: B/149 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 72 செவ் 8 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த<br>எதிர்பார்ப்பு: கடை முதலாளி,<br>தொ.இ: G/1444 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: 50¾ செவ் 7 இல் உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ.த. வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/171 | பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 44 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த.<br>எதிர்பார்ப்பு: .வியாபாரம், கமம்.<br>தொ.இ: G/1457 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தீயணைப்பு பிரிவின் பணிகள் இடைநிறுத்தம்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவின் பணிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளது என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் அறிவித்துள்ளார்.

தீயணைப்பு பிரிவின் பணியாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் தீயணைப்பு பிரிவின் சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தீயணைப்பு பிரிவின் சேவைகள் அவசியம் தேவைப்படின் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 077 951 5721 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4)



முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கு கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் தவராசா அமலனினால் அலுமாரி ஒன்று வழங்கப்பட்டது.
(படம்: கிருஷ்ணகுமார்)



ஒக்டோபர் 24 போலியோ தினத்தினை முன்னிட்டு கிளிநொச்சி நகர றோட்டறி கழகத்தினரால் விழிப்புணர்வு செயற்பாடு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் திருமதி. றூபவதி கேதீஸ்வரனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜனும் கலந்து கொண்டார்.
(படம்: கிருஷ்ணகுமார்)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டத்தின்கீழ் கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி அண்மையில் வழங்கப்பட்டது.

# 14 லட்சம் பெறுமதியான கஞ்சா மீட்பு இருவர் கைது



(மன்னார்)

மன்னாரில் 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சா பொதிகளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் தலைமன்னார் பொலிஸ் பிரிவில் 14 கிலோ 170 கிராம் கேரளக் கஞ்சாப் பொதிகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்கவின் பணிப்பில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராச்சி, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.பி.ஜயதிலக ஆகியோரின் வழிகாட்டலில் மன்னார் ஊழல் தடுப்புப் பிரிவு உபபொலிஸ் பரிசோதகர் வீரசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த கேரளக் கஞ்சாப் பொதிகளை மீட்டனர்.

குறித்த கேரளக் கஞ்சா பொதிகளை தம்வசம் வைத்திருந்த, மற்றும் விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேக நபர்கள் மன்னார் நீதிமன்றில் சந்தேக நபர்கள் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (5-4-285)

# மானை வேட்டையாடியவர் வனவளத் திணைக்களத்தால் கைது

(குருமன்காடு)

வவுனியா புளியங்குளம் காட்டுப்பகுதியில் மானை வேட்டையாடி இறைச்சியாக்க முற்பட்ட நபரை வவுனியா மாவட்ட செயலக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மடக்கிப்பிடித்துள்ளனர்.

வவுனியா வடக்கு புளியங்குளம் காட்டுப்பகுதியில் மான், பன்றி போன்ற விலங்குகள் வேட்டையாடப்படுவதாக வவுனியா மாவட்ட செயலக வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் புளியங்குளம் பொலிஸாரின் உதவியுடன் புளியங்குளம் காட்டுப்பகுதிக்கு நேற்று முன்தினம் மாலை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற் கொண்டனர்.

இதன்போது காட்டுப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை அவதானித்த அதிகாரிகள் காட்டுப்பகுதியில் மேலும் ஊடுருவி சென்ற வேளை மான் ஒன்றினை வேட்டையாடி இறைச்சியாக்க முற்பட்ட நபரை பொலிஸார் கைது செய்தனர்.



கைப்பற்றப்பட்ட உயிரிழந்த மான், மோட்டார் சைக்கிள் என்பவற்றுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை புளியங்குளம் பொலிஸாருடன் இணைந்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் முன்னெடுத்தனர். (5-4-250)

# நெற்செய்கை மேற்கொள்ள 193 குடும்பங்களுக்கு அனுமதி

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் ஆற்றை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் 193 குடும்பங்களுக்கு தலா ஒரு ஏக்கர் வயல் நிலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு நேற்று முன்தினம் அனுமதி வழங்கப்பட்டது.

காலபோக நெற்செய்கைக் கூட்டத்தின் போது கரைச்சி பிரதேச செயலாளரிடம் அக்கராயன் கிழக்கு மக்கள் தமக்கு வயல் நிலம் வேண்டும் எனவும் அக்கராயன் ஆற்றுப் பகுதியில் இதற்கான காணி உள்ளது எனவும் தெரிவித்த நிலையில் பிரதேச செயலாளர் குறித்த காணியினை பார்வையிட்டு காணி தேவைப்படும் குடும்பங்களுக்குத் துப்புரவு செய்வதற்கான அனுமதியினை வழங்கினார்.

இயந்திரங்களின் உதவியுடன் துப்புரவுப் பணிகள் கடந்த ஒரு வாரமாக நடைபெற்ற நிலையில் அக்கராயன் ஆற்றுப் பகுதியில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.(5-4-350)

# வவுனியாவுக்குள் நுழைவோருக்கு வெப்பநிலை பரிசோதனை



(குருமன்காடு)

கொரொனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை காப்பற்றுவதற்கு வவுனியா வர்த்தக சங்கத்தினால் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு மனிதனின் வெப்பத்தினை அளவிடும் கருவிகள் நான்கு நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

இந்நான்கு கருவிகளையும் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ச.சுஜன், செயலாளர் ஆ.அம்பிகைபாலன், பொருளாளர் என்.செல்வரட்ணம் ஆகியோர் இணைந்து வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.எம்.சமன் பந்துலசேனவிடம் கையளித்தனர்.

இன்று முதல் வவுனியா மாவட்டத்திற்கு வருகை தரும் அனைவரும் வவுனியாவிற்குள் நுழையும் பகுதிகளான ஈரட்டைப்பெரியகுளம், பூவரசங்குளம், ஓமந்தை, மாமடு ஆகிய பகுதிகளில் குறித்த கருவியின் பரிசோதனையின் பின்னரே வவுனியா மாவட்டத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-250)

# இராசிபலன்

24.10.2020
ஐப்பசி 08, சனிக்கிழமை
அட்டமி பிற்பகல் 12.20 மணிவரை
உத்தராடம் முற்பகல் 7.08 மணிவரை
சுபநேரம் 3.02 - 4.32 மணிவரை
இராகுகாலம் 9.02 - 10.32 மணிவரை
சந்திராஷ்டமம் - திருவாதிரை
மகா நவமி விரதம்

வளவன்


மேஷம்

பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


ரிஷபம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்கள் அகலும், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.


மிதுனம்

எந்தக்காரியத்திலும் நிதானமாக நடந்து கொள்வது நல்லது, கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.


கடகம்

சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


சிம்மம்

தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கன்னி

மனநிறைவு கூடும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


துலாம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.


விருச்சிகம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வளர்ச்சி கூடும் நாள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.


மகரம்

ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய காரியம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், தேகநலனில் அக்கறைகாட்ட முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.


கும்பம்

சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.


மீனம்

அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

மற்றவர்கள் உன்னை ஏமாற்ற பாதிக்காரணம் நீதான்.

# '20'இற்கு ஆதரவாக வாக்களிப்பு

# அரவிந்தகுமார் இடைநிறுத்தம்

(கொழும்பு)

**தமிழ் முற்போக்குக் கூட்டணியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.**

அரவிந்தகுமார் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்குமாறு அவரது கட்சியான மலையக மக்கள் முன்னணியிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த சட்டமூலத்துக்கு எதிராக தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

எனினும், அ.அரவிந்தகுமார் மட்டும் ஆதரவாக வாக்களித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# தற்காலிகமாக மூடல்



(கொழும்பு)

பேருவளை மீன்பிடித் துறைமுகம் நேற்று வெள்ளிக்கிழமை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த துறைமுகப் பகுதியைச் சேர்ந்த பலர் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டதையடுத்து குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று பேருவளை மீன்பிடித்துறைமுகம்மற்றும்அதனை அண்டிய பிரதேசங்களில் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ-4)

(கொழும்பு) .

காலி பிராதான தபால் நிலையத்தில் சேவையை பெற வந்த சேவை பெறுநர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தபால் நிலையம் தற்காலிமாக மூடப்பட்டுள்ளது. தபால் நிலையத்தை மூடு மாறு சுகாதார் அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைவாகவே இவ்வாறு காலி பிரதான தபால் நிலையத்தை தற்காலிமாக மூடியதாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 19 ஆம் திகதி தபால் நிலையத்திற்கு வந்த சேவைப் பெறுநர் ஒருவரே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார். (ஐ-4)

# சிறுமி பலி

(கொழும்பு)

மாரவில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திஹகொட, குடாபான சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுமி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

முடியனபகுதியைநோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று கிளை வீதியினூடாக பிரதான வீதிக்கு வந்த டிப்பர் வாகனத்தில் மோதி இந்த விபத்து இடம்பெற்றது. இதில் உயிரிழந்த சிறுமி 13 வயதுடைய கோமில, மாரவில பிரதேசத்தை சேர்ந்தவர்.

இவ்விபத்து தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

# சீனா நன்கொடை

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான போராட்டத்திற்கு உதவும் வகையில் 25 ஆயிரம் பரிசோதனை உபகரணங்களை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

கொரோனா நெருக்கடி நிலையில் இலங்கைக்கு சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களை சீனா தொடர்ந்து நன்கொடையாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# மனித உரிமைகள் மீறல் '1996' ஐ அழையுங்கள்



(கொழும்பு)

நாடு முழுவதும் கொரோனா வைரஸ் அச்ச நிலைமை காரணமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

அந்தவ்கையில் கல்முனை பிராந்திய அலுவலக இணைப்பாளர் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளதாவது,

மனித உரிமை மீறல் தொடர்பாக முறைப்பாடு செய்ய விரும்புகின்றவர்கள் 1996 என்ற அவசர இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமது முறைப்பாட்டைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (ஐ-4)

# பாரதம்

## இந்தியாவில் இரண்டு மாதங்களின் பின் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை குறைந்தது

(டில்லி)

இந்தியாவில் தினசரி கண்டறியப்படும் புதிய நோய்த்தொற்று எண்ணிக்கையை விட குணமடைவோர் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 77.61 இலட்சமாக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 54,366 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 69.48 லட்சமாக உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் மட்டும் 73979 பேர் குணமடைந்துள்ளனர்.

தினசரி கண்டறியப்படும் புதிய நோய்த்தொற்று எண்ணிக்கையை விட அதிக நபர்கள் குணமடைந்து வருகின்றனர்.

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் 6,95,509 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதன் மூலம் இரண்டு மாதங்களுக்கு பிறகு (63 நாட்கள்) சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 7 லட்சத்திற்கும் கீழ் குறைந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்பு 1.51 சதவீதமாக உள்ளது. குணமடையும் விகிதம் 89.53 சதவீதமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)

## பிரபாகரன் வாழ்க்கைத் தொடரில் நடிக்க விஜய் சேதுபதிக்கு வாய்ப்பு வழங்கிய இயக்குநர்



(சென்னை)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றுத் தொடரில் நடிக்க விஜய் சேதுபதிக்கு பிரபல இயக்குநர் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் படத்தில் விஜய் சேதுபதி நடிக்கக் கூடாது என்று கண்டனங்கள் எழுந்த நிலையில் அவர் '800' திரைப்படத்திலிருந்து விலகினார்.

இந்நிலையில் பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றை வெப் தொடராக இயக்க இருப்பதாகவும் அதில் நடிகர் விஜய் சேதுபதியை நடிக்க வைக்க இருப்பதாகவும் இயக்குநர் ஏ.எம்.ஆர்.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இயக்குநர் ஏ.எம்.ஆர். ரமேஷ் சந்தனக் கடத்தல் வீரப்பனின் வாழ்க்கையை 'வனயுத்தம்' என்ற பெயரில் திரைப்படமாக்கியவர்.

இந்நிலையில் பிரபாகரன் கரக்டருக்கு விஜய் சேதுபதி பொருத்தமாக இருப்பார் என்பதால் அவரிடம் இது குறித்து பேச உள்ளதாகவும் ஏ.எம்.ஆர். ரமேஷ் கூறியுள்ளார்.

விஜய் சேதுபதி பிரபாகரன் கரக்டரில் நடிப்பாரா? என்பதை பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும். (நி)

## பல்பொருள் அங்காடியில் தீ விபத்து தீ அணைக்கும் பணி மும்முரம்

(மும்பை)

இந்தியாவில் மகராஷ்டிரா மாநிலத்தில் மும்பையின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள நகபடா என்ற நகரில் பல்பொருள் அங்காடியில் பாரிய தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த தீவிபத்து நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் ஏற்பட்டுள்ளது. முதலில் இலேசாக பற்றிய தீ, நேரம் செல்ல செல்ல கொழுந்து விட்டு எரிந்துள்ளது.

இதையடுத்து, அதிகாலை தீ அணைப்பு வீரர்கள், தீயை அணைக்கும் பணிக்கு வரவழைக்கப்பட்டனர்.

தீ விபத்து பாரியளவில் இருந்ததால், பல்பொருள் அங்காடியில் அருகில் இருந்த 55 மாடிகள் கொண்ட அடுக்கு மாடி குடியிருப்பில் வசித்த மக்கள் சுமார் 3 ஆயிரத்து 500 பேர் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

24 தீ அணைப்பு வாகனங்களின் உதவியோடு தீயை அணைக்கும் பணியில் சுமார் 250 வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அருகாமையில் உள்ள கட்டடங்களில் வசித்த மக்கள் அனைவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொலிஸாரின் உதவியுடன் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தீயை அணைக்கும் பணியின் போது தீ அணைப்பு வீரர்கள் இருவர் காயம் அடைந்துள்ளனர். தொடர்ந்து தீயை அணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. (நி)

## கப்பல்களை தாக்கி அழிக்கும் அதிநவீன ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதித்தது இந்தியா

(டில்லி)

எதிரி நாடுகளின் கப்பல்களை தாக்கி அழிக்கும் நவீன ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

கடலில் நிறுத்தப்பட்டிருந்த இந்திய கடற்படை கப்பலான ஐஎன்எஸ் பிரபாலில் (INS Prabal) இருந்து கப்பல்களை தாக்கி அழிக்கும் நவீன ஏவுகணையை இந்தியா செலுத்தி சோதனை நடத்தியுள்ளது.

அந்த ஏவுகணை கடலில் இன்னொரு இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த இன்னொரு சிறிய கப்பலை மிக துல்லியமாக தாக்கி அழித்துள்ளதுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லடாக் எல்லையில் சீனாவுடன் தொடர்ந்து பதற்றம் நிலவும் நிலையில் கடந்த 2 மாதமாக இந்தியா பல்வேறு ஏவுகணைகளை அடுத்தடுத்து சோதனை நடத்தி வருகிறது.

அதில் தாக்குதல் தூரம் நீட்டிக்கப்பட்ட பிரம்மோஸ், பிருத்வி-2, ருத்ரம்-1, சவுர்யா, நாக் உள்ளிட்ட ஏவுகணைகளும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தலிபான்களை குறிவைத்து நடத்

## 12 குழந்தைகள் உட்பட 2



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்களை குறிவைத்து அரச படையினர் நடத்திய தாக்குதலில் தவறுதலாக 12 குழந்தைகள் உட்பட 26 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானின் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையே 19 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இந்த உள்நாட்டுப் போரில் ஆப்கானிஸ்தான் அரசுக்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஆதரவு அளித்து வருகின்றன. ஆனாலும் போரை முடிவுக்கு கொண்டுவர தலிபான்கள் - அமெரிக்கா இடையே உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, கட்டார் தலைநகர் டோகாவில் தலிபான்களுக்கும் ஆப்கானிஸ்தான் அரசுக்கும் இடையே தற்போது பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டு பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டு சண்டை முடிவுக்கு கொண்டுவர தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைதிப் பேச்சுவார்த்தை ஒரு பக்கம் நடைபெற்று வந்தாலும் தலிபான் பயங்கரவாதிகள் ஆப்கானிஸ்தானில் தங்கள் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தானின் தாஹர் மாகாணம் பஹர்க் மாவட்டத்தில் பாதுகாப்பு பணிக்காக நேற்று முன்தினம் பாதுகாப்புப்படையினர் வாகனத்தில் சென்று கொண்டி

## நிலக்கரிச் சுரங்கம் இடிந்


## 11 பேர் உயி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் நிலக்கரி சுரங்கம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேசியாவின் தெற்கு சுமாத்ரா மாகாணத்தின் மவ்ரா இமிம் ரிஜென்சி பகுதியில் சட்டவிரோதமாக நிலக்கரி தோண்டி எடுக்கும் வேலையில் அப்பகுதியை சேர்ந்த மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சுரங்க நடவடிக்கையின் போது எதிர்பாராத விபத்துக்களும் நிகழ்கிறது.



இந்நிலையில், ரிஜென்சி பகுதியில் உள்ள ஒரு மலைப் பகுதியில் சட்டவிரோதமாக தோண்டப்பட்ட நிலக்கரி சுரங்கத்தில் 10 இற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். 20 மீற்றர் ஆழத்தில் இந்த சுரங்க வேலைகள் நடைபெற்று வந்தது. அப்போது அங்கு பெய்த கனமழை காரணமாக சுரங்கத்தின் மேற்பரப்பில் இருந்த மண் இடிந்து விழுந்தது.

இதில், சுரங்கவேலை செய்து கொண்டிருந்தவர்கள் மண்ணுக்குள் புதைந்தனர். தகவலறிந்து அக்கம் பக்க கிராம மக்கள் சம்பவ இடத்திற்கு சென்று மண்ணுக்குள் புதைந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனாலும், இந்த விபத்தில் சிக்கி 11

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—217

## கொரோனாவின் தாக்கமும் மொபைல் தொழில்நுட்பத்தினதும் டிஜிற்றல் விவசாயத்தினதும் தேவையும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இந்துக்களுக்கு அதி முக்கியமான புனித நவராத்திரி விழாக்களின் பிரதி பலன்கள் உலகத்தின் அனைத்து மக்க ளுக்கும் கிடைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக. முப்பெருந் தேவியரின் அருட்கடாட்சம் உலகில் அல்லலுறுகின்ற அனைத்து மக்களுக்கும் கிடைக்க நாமெல்லோரும் பிரார்த்திப்போமாக. சக்தியின் பிறப்பிடம் அன்னையல்லவோ.

வீரத்திற்கும் செல்வத்திற்கும் கல்விக்கும் அதிபதிகளாகிய அன்னையரை மனமார துதித்தால் அனைத்து துயர்களும் அகன்று அருள் கிடைத்துவிடும். மதங்களைத் தாண்டி அனைவருக்குமாக நாம் பிரார்த்தனை செய்ய வேண்டிய காலகட்டத்தை உணர்த்தியிருக்கின்றது உலகில் தற்போது தாண்டவமாடும் மகுட வைரஸ் நுண்ணுயிரி (கொவிட்-19).

பிரச்சினைகள் காலத்துக்குக் காலம் எம்மை ஆட்கொண்டிருப்பதனை நாம் அனுபவத்தில் கண்டிருக்கின்றோம். ஆனாலும் தற்போது உயிர்த்தெழுந்திருக்கின்ற மகுட வைரஸ் நுண் ணுயிரி (கொவிட்-19) (எந்தவித பேதமுமின்றி அனைவரையும் அழிப்பதனையே குறிக்கோளாகக் கொண்டு அவ்வப்போது உயிர்த்தெழுந்து மனிதரை ஆட்கொள்ளுகின்றது.

தொற்றுதல் எவ்வாறு நிகழ்கின்றது என எண்ணு முன்னரேயே பலரை அது தொற்றிவிடுகின்றது. இது தவிர இவ்வாறு தொற்றுதலுக்குள்ளானவர்கள் குறிப்பாக மாணவர்களும் இளையவர்களும் மன உளைச்சலுக்குள்ளே சிக்கித் தவிக்கின்ற நிலைமையையும் நாம் காண முடிகின்றது.

வீடுகளில் தனிமைப்படுத்தப்படும் போதும் விடுதிகளில் தனிமைப்படுத்தப்படும் போதும் உள ரீதியாக பாதிக்கப்படுவதனை அறிய முடிகின்றது. குறிப்பாக மற்றையவர்கள் நோய்த் தொற்றுக்குள்ளானவர்களை தீண்டத்தகாதவர்கள் போல வெறுத்தொதுக்குகின்ற செயலை அறியும் போது மனித குலம் இன்னும் திருந்த வில்லை என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.


ஆனாலும் இப்படியொரு நிலைமையில் மருத்துவ உலகம் குறிப்பாக வைத்தியர்கள், தாதியர் இவ்வாறான நோயாளிகளை அணுகி அவர்களுக்கான பரிகாரங்களை வழங்குவதனை தெய்வ செயலாகவே பார்க்க வேண்டும்.

கொரோனா நோய் எவருக்கும் எந்நேரமும் தொற்றலாம். சுகாதார நடைமுறைகளை முறையாக அனுசரித்து எம்மையும் எமது குடும்பத்தையும் நாட்டு மக்களையும் பொறுப்புணர்ந்து காப்பாற்ற வேண்டியது நமது கடமையாகும்

நோய்தொற்றுக்குள்ளான ஒருவர்சென்று வருகின்ற இடங்களெல்லாம் அங்குள்ள மக்களுக்கு தொற்றுதலை ஏற்படுத்திவிட்டுவிடுவர். இதனால் இது விரைந்து ஏனையவர்களுக்கும் பரவ ஏதுவாகின்றது. அதனால் பொறுப்புணர்ந்து நாம் நடந்து கொள்ள வேண்டும்.

பிரச்சினைகள் எழும்போதெல்லாம் அதனை சமாளிப்பதற்காக புதிய தொழில்நுட்பங்கள் உள்வாங்கப்படுவது இயற்கையே. விவசாய செய்கையில் அதிலும் முக்கியமான உணவுற்பத்தியில் சிறந்த ஆலோசகராகவும் திட்டங்

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 300



களைத்தீட்டி உலக மக்களுக்கு தமது சேவைகளை ஈந்துயர்ந்திருக்கின்ற ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உலக உணவு மற்றும் விவசாய தாபனத்தின் 75 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு கருத்துத் தெரிவித்த 2019 இல் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலைக்கழக பேராசிரியர் மைக்கேல் கிறேமர் (Michael Kremer) விவசாய செய்கையில் மொபைல் தொழில்நுட்பத்தினதும் டிஜிற்றல் விவசாயத்தினதும் பயன்பாடு அதிகரிக்க வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்.

இத்தொழில்நுட்பத்தின் மூலம் சூழல் சார்ந்த டிஜிற்றல் தகவல்களை சேகரிக்கவும் நோய் மற்றும் பீடைக்கட்டுப்பாட்டை உறுதி செய்யவும் சந்தைப்படுத்தலிலும் இன்னும் விவசாயம்சார்ந்த தொழிற்றுறையிலும் அதி கரித்த பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளலாம். அனைவரிடத்திலும் தற்போது ஆகக் குறைந்தது ஒரு மொபைல் இணைப்பாவது இருப்பதனை பார்க்க லாம்.

பலருக்கு அதனுடனேயே அன்றைய பொழுது முழுமையாக செலவழிகின்றது என்பதனையும் கவனிக்கலாம். என்ன இருந்தாலும் மொபைல் தொழில்நுட்பத்தின் அபரீத வளர்ச்சி இறுதியில் 5G அலைவரிசை வரை வந்து நிற்கின்றது என்றும் அதனது பயன்பாடு விரைந்த தொழிற் சேவைக்கு அதிகளவில் பங்களிக்கின்ற அதேநேரத்தில் அதனால் பாதிப்புக்களும் உண்டு என வாதிடுபவர்களும் இருக்கவே செய்கின்றார்கள். உலக விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியுடன் போட்டிபோட்டு நாமும் எம்மை எமதறிவை உயர்த்திக் கொள்ளாது விட்டால் நாம் பின்னடைந்த நிலையில் ஒரு குறுகிய வட்டத்திற்குள் சிறைப்பிடிக்கப்பட்டவர்களாவோம். தேவையான மாற்றத்தை நாமும் விரைந்து கடைப்பிடிக்க வேண்டிய தேவை எமக்கான வசதி வாய்ப்புக்களை அதிகரிக்கவே செய்யும்.

மொபைல் தொழில்நுட்பம் (Mobile Technology) பரந்துபட்ட அளவில் பலரும் பயன்படுத்தத் தக்கதாக எளிய வடிவினைப் பெற்றிருப்பது எமக்கு வசதியாக இருக்கின்றது. குறிப்பாக சந்தைப்படுத்தலில் இதனது பயன்பாடு அதிகமானதாக தற்போது காணப்படுகின்றது. சாதாரணமாக சிறியளவில் மரக்கறி மற்றும் மீன் விற்பவர்கள் கூட தமது மொபைல் தொலைபேசியின் இலக்கத்தை பொது இடங்களில் எழுதி வைத்திருப்பது அங்குள்ளவர்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தமக்குத் தேவையானவற்றை கொள்வனவு செய்ய வசதியாக இருப்பதுடன் முன்கூட்டியே தமது தேவைகளை விற்பவர்களுக்கு தெரிவிக்கவும் ஏதுவாக இருக்கின்றது. இந்த மொபைல் தொழில்நுட்ப வசதியை விரிவாக அனைத்து மக்களும் சிரமமின்றி பெறுவதற்கான இணைப்பு தொழில்நுட்பத்தை எமது மென்பொறியியலாளர்களும் கணனி வல்லுநர்களும் இன்னும் கணனியை கற்றவர்களும் உருவாக்கலாமே. தொழில் வாய்ப்பினைத் தரக்கூடிய இவ்வகையான வாடிக்கையாளர்களையும் விற்பனையாளர்களையும் தனித்தனியே இணைக்கும் மென்பொருட்களை விலை குறைந்த வழியில் உருவாக்கினால் அனைத்து மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

இவை தவிர மொபைல் தொழில்நுட்பத்தை விவசாய மற்றும் அது சார்ந்த தொழிற்றுறைக்கும் விரிபுபடுத்தினால் இன்னும் அதனது தேவைகளை மக்கள் விரைந்து பயன்படுத்தவும் கொரோனா இடர் காலத்தில் அதனது உச்ச பயன்பாட்டைப் பெறவும் வழிவகுக்கும். எம்மிடையே 'இருக்கின்ற அறிவினை மக்களுக்கு பயனுள்ளதாக்கவும் மக்கள் அல்லல்படும் போது அதனது பயன்பாட்டை முழுமையாக அனுபவிக்கவும் உதவியாக இருக்கும்.

விவசாய செய்கையில் உள்ளீடுகளைப் பெறவும், விவசாய தொழில்நுட்பங்களை கிரகிக்கவும் அதனை முறைப்படி விளங்கி செய்வதற்கும் மொபைல் தொழில்நுட்பம் பெரிதும் பயன்படும். ஒவ்வொருவரினதும் கையிலிருக்கும் சிறிய மொபைல் கருவியினூடாக உலகத்தை இணைக்கும் தொழில்நுட்பத்தினுள் நாம் சிறைப்பிடிக்கப்பட்டாலும் அதனது பயன்பாடுகளை முழுமையாக பிரயோகிக்க அந்த தொழில்நுட்பத்தின் வசதி வாய்ப்புக்களை விரிவுபடுத்திக் கொள்ளலாம். கண்டுபிடிக்கப்படும் ஒவ்வொரு தொழில்நுட்பமும் மனிதனை காப்பாற்றுவதற்காகவே என்னும் சிந்தனை உள்ளவர்களுக்கு இத்தகைய தொழில்நுட்பம் அனைத்தும் பயனுள்ளதாக அவசியம் பயன்படும்.

இதேபோன்றதொரு தொழில்நுட்பமாக டிஜிற்றல் விவசாயமும் (Digital Agriculture) முனைப்புப் பெற்றிருக்கின்றது. டிஜிற்றல் விவசாய பொறிமுறையில் பலவகையான கருவிகளின் கண்டுபிடிப்புக்கள் விவசாய செய்கையை மென்மேலும் மேம்படுத்தும் என நம்பலாம்.

எமது சூழலை பாதிக்காத வகையில் இவ்வகையான கருவிகளின் பாவனை அதிகம் விவசாயச் செய்கையின் உற்பத்தியை அதிகரிக்க பயன்படும். இந்தவகையில் உருவானறோன் (Drone) என்னும் தானியங்கித் தொழி ல்நுட்பம் இவற்றுக்கொல்லாம் முன்மாதிரியானதாக இருக்கின்றது.

விவசாய செய்கையில் றோன்கள் இரசாயனங்களை விசிறவும் விளைச்சலைக் கண்காணிக்கவும் இன்னும் மகரந்த சேர்க்கையை தேனீக்களுக்கு பதிலாக செய்யவும் உருவாக்கி வெற்றியும் கண்டிருக்கின்றார்கள். ஆனால் அவற்றின் பயன்பாடு இன்னும் எமது கைகளுக்கு எட்டாத தூரத்திலேயே காணப்படுகின்றது. டிஜிற்றல் விவசாய உற்பத்தி அனைவரினதும் தேவைக்கேற்ப சீராக நடைபெறுவதனை உறுதி செய்தல் நல்லது. எந்தவகை உயர்வான தொழில்நுட்பமாயினும் அதனது பயன்பாடு சீரானதாக இருப்பதனை உறுதி செய்த பின் அதனை மக்கள் பயன்பாட்டுக்கு விடுவது நல்லது. பாரம்பரிய முறைகளையும் சேதன விவசாயச் செய்கையினையும் எந்த வகையிலும் பாதிக்காத விஞ்ஞான தொழில்நுட்பம் எந்நேரத்திலும் மக்களின் பாவனைக்கு வருவது நல்லது. ஆனால் அது எந்த வகையிலும் மக்களின் நலனுக்கு குந்தகம் விளைவிப்பதாக மாறிவிடக்கூடாது.

வளர்ந்து வரும் மொபைல் தொழில்நுட்பத்தினையும் டிஜிற்றல் தொழில்நுட்பத்தினையும் மக்களுக்கு பயனுள்ளதாக அனைவரும் பயன்படுத்துவதனை உறுதி செய்வதோடு இவ்வாறான தொழில்நுட்பங்களை மென்மேலும் எளிமையானதாக்கி அனைத்து செயற்பாடுகளுக்கும் பயன்படுத்துவதனை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம். தற்போதுள்ள கொரோனா இடர் காலத்தில் இவற்றின் பயன்பாட்டை எளிய முறையில் இலகுவாக கையாளத்தக்கதாக மாற்றி மக்களுக்கு பயன்படச் செய்தால் மிகவும் பேருதவியாக இருக்கும்.

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

## கேள்வி அறிவித்தல் - 2021
## (01.01.2021 - 31.12.2021)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2021 ஆம் திகதி முதல் 31.12.2021ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - ரூபா 1,000.00 |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - 26.10.2020- 12.11.2020 ( மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை) |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 13.11.2020 மு.ப 9.00 மணி வரை |
| கேள்வி திறத்தல் | - 13.11.2020 10.00 மணிக்கு |

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 10.11.2020ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

பொது நிபந்தனைகள் :

1.கேள்வியில் சித்தி பெற்றவர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதி தொகையை செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். 1/3 பகுதியை செலுத்தியவர்கள் மிகுதித் தொகையை 08 சம பங்குகளாக 2021 தை முதல் ஆவணி வரையான கட்டணங்களாக ஒவ்வொரு மாதத்திற்குமுரிய கட்டணத்தை அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும். தவறும் பட்சத்தில் மாத குத்தகைப்பணத்தின் **10%** தண்டம் மேலதிகமாக அறவிடப்படும்.

2. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் அவரது வதிவிடத்தை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் மூலம் உறுதிப்படுத்திய கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை நேரடியாக சமர்ப்பிப்பதுடன், அதன் நிழற்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள், மாநகரசபைக்கு ஏதாவது நிலுவைக் கட்டணங்களை முன்னைய காலங்களில் / நடப்பு ஆண்டில் செலுத்த தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருந்தால், கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு கடைகள் வழங்கப்படமாட்டாது.

4.ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளைப் பெறுவதற்கு கேள்விதாரர் சித்தியடைந்திருப்பின் ஒரு கடை மாத்திரமே குத்தகைக்கு வழங்கப்படும் என்பதுடன் அது எத்தகைய கடை என்பது பற்றிய இறுதி முடிவு சபையினதாகும். ஏனைய கடைகளுக்கு அடுத்த நிலையில் உள்ள கேள்விதாரரின் சித்திகரத்தன்மை அவரது கேள்வித்தொகை, அனுபவம், சபையுடனான நல்லுறவு என்பவற்றை கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படலாம்.

5.அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பிப்பவர்களுக்கே குத்தகை வழங்கப்படும். அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பித்தவர்கள் குத்தகையை எடுக்கத் தவறின், அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்திப்படக்கூடிய வகையில் அமைந்தால் பரிசீலிக்கப்படலாம் அல்லது மீள்கேள்வி கோரப்படலாம்.

6.கடைகள் மற்றும் சந்தைகள் தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு வழங்கப்படும். அதனை குத்தகைதாரர் ஏற்றுக் கொண்டதாகக் கருதியே குறித்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

7. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை காரணங்காட்டாது ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணம் மாநகர சபைக்கே உரியது.

### சந்தைகளைக் குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.

1.சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு ஒருவரால் கொண்டுவரப்படும் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 4% இனை அவரிடமிருந்து கட்டணமாக அறவிடலாம். குத்தகைதாரர் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) வியாபாரி ஒருவரிடமிருந்து நாள் ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூபா 100.00 அறவிடலாம். மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூபா 100.00 அறவிடலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடப்படலாகாது.

2.சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 10.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 20.00 உம் அறவிடலாம். மேலதிகமாக எந்தவிதமான கட்டணங்களும் அறவிடப்படலாகாது.

3.சந்தைகளை குத்தகைக்கு பெறுபவர்கள் விரும்பினால் சந்தை வளாகத்தில் இடமிருக்கும் பட்சத்தில் அல்லது பிறிதொருவரின் காணியில் அனுமதியுடன் கூடாரம் இட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களை தங்களது செலவில் அமைத்து நடத்தலாம். எனினும் இந்நிலையத்தில் விடப்படும் சைக்கிள்களுக்கு குத்தகையாளர்களே பொறுப்பு என்பதுடன் மேலே இல. 2 இல் குறிப்பிட்ட பாதுகாப்பு கட்டணங்களையே அறவிட முடியும்.

4.அரசினால் அறிவிக்கப்படும் விசேட விடுமுறை தினங்களில் மீன் சந்தை பூட்டப்படல் வேண்டும்.

### சிற்றுண்டிச்சாலைகளைக் குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.

1.சிற்றுண்டிச்சாலை காலை 07.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.
2.சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.
3.மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூபா 20,000.00 இனை உடனடியாகவே செலுத்துதல் வேண்டும்.
4.துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோருபவர் தடையறாத சேவையை வழங்க வேண்டும். இது தொடர்பான மேலதிக நிபந்தனைகள் தங்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவை கேள்விப்படிவத்துடன் தங்களுக்கு வழங்கப்படும்

### இறைச்சிக் கடைகளை குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.

1.இறைச்சி மற்றும் உணவுப்பொருட்கள் மாவட்ட விலை நிர்ணயக் குழுவால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாட்டு விலைக்கே விற்பனை செய்யப்படல் வேண்டும்.

2.வெள்ளிக்கிழமை, பூரணை தினங்கள் மற்றும் அரசால் அறிவிக்கப்படும் விடுமுறை தினங்களில் இறைச்சிக்கடைகள் பூட்டப்படல் வேண்டும்.

3.வெளியிடங்களிலிருந்து சட்ட ஏற்பாடுகளுக்கமைய கால்நடைகள் கொண்டு வருவது குத்தகையாளரது பொறுப்பே ஆகும். இதற்கு சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

4.பன்றி இறைச்சிக்கடையை குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் அதற்கென தனியான கொல்கள ஏற்பாட்டை தாமே செய்து கொள்ள வேண்டும்.

5.சபைக்கு சொந்தமான இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு பெற்றுக்கொள்வோர் பொதுநிபந்தனை இல 01 இல் குறிப்பிட்டதற்கு மேலதிகமாக மாதாந்த வாடகையையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

6.கொல்லப்படுவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பொதுமக்களின் பார்வைக்காக கால்நடைகள் மாநகரசபைக் கொல்களத்தில் கட்டப்பட வேண்டும்

7.அறுக்கப்படும் விலங்குகள் உரிய அதிகாரிகளின் முன்னிலையிலேயே அறுக்கப்படல் வேண்டும்.

8.காதடையாளம்(Ear tag) சுகாதார சான்றிதழ் மற்றும் 1958ஆம் ஆண்டில் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டத்தின் பிரகாரம் 2009.11.26ஆம் திகதிய **1629/17** இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அட்டவணை 6 இல் பிரசுரிக்கப்பட்டவாறான விலங்கு உறுதிச்சீட்டு உள்ள மாடுகளையே கொல்களத்தில் வெட்ட வேண்டும்.

9.கொல்களத்தில் அறுக்கப்படும் ஆண் ஆடுகள் கிராமசேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரின் கடிதத்துடனேயே கொல்களத்திற்கு வெட்டுவதற்கு கொண்டுவர முடியும்.

10.இனப்பெருக்கத்திற்குரிய நல்லின பெண் ஆடுகள் வெட்டப்படுவதை தடுப்பதற்காக அவை கொல்லப்படுவதாக இருந்தால் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்திற்கு மேலதிகமாக பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியினால் இனப்பெருக்கத்திற்கு தகுதியற்றது என்ற சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

11.ஒவ்வொரு இறைச்சிக்கடை உரிமையாளரின் பெயரிலேயே விலங்கு உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12.கொல்களத்தில் காலை 6.00 மணிக்குப் பின்னரே விலங்குகளை வெட்ட முடியும்.

13.கொல்களத்தில் ஆடு, மாடு வெட்டும் பணியாளர்கள் மாநகர சபையில் முன்னரே பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். பதிவு செய்யாதவர்கள் கொல்களத்தில் மாடு வெட்டும் மற்றும் ஏனைய வேலைகளில் ஈடுபட முடியாது.

14.கொல்களம் மற்றும் இறைச்சி கடைகளில் குத்தகை உரிமையாளர்களால் தொழிலுக்கு அமர்த்தப்படுவோர் சரும நோய்கள், தொற்று நோய்கள் தமக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச்சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

15.கொல்களம் மற்றும் இறைச்சிக்கடைகளில் புகைத்தல், மதுபான பாவனை, வெற்றிலை பாவனை என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபட்டால் கொல்களத்திலிருந்து உடனடியாக வெளியேற்றப்படுவர்.

16.கொல்களத்திலிருந்து இறைச்சியானது கடைகளிற்கு மூடிய பாத்திரங்களில் கொண்டு செல்லப்பட வேண்டும்.

17.கொல்களத்தில் தொழிலாளர்கள் காலுறை **(Boots)** மற்றும் கையுறை **(gloves)** அணிந்தே இறைச்சி வெட்டும் தொழிலில் ஈடுபடவேண்டும்.

18.இறைச்சி விற்பனையில் ஈடுபடுவோர் சுத்தமான ஆடைகள் மற்றும் மேலங்கி (ஏப்ரன்) தொப்பி என்பன அணிந்து விற்பனையில் ஈடுபட வேண்டும்.

19.இறைச்சி கொண்டு செல்லும் வாகனம் பொதுச்சுகாதார பரிசோதகரினால் முன்னரேயே பரிசோதிக்கப்பட்டு இறைச்சி கொண்டு செல்ல தகுதியானது என அனுமதிக்கப்பட்டால் மட்டுமே அவ்வாகனத்தில் இறைச்சி கொண்டு செல்ல முடியும்.

| | |
|---|---|
| 1 | பண்ணை |
| 2 | பண்ணை |
| 3 | பண்ணை |
| 4 | பண்ணை |
| 5 | பண்ணை |
| 6 | பண்ணை |
| 7 | பண்ணை |
| 8 | பண்ணை |
| 9 | பண்ணை |
| 10 | பண்ணை |
| 11 | செங்குந் |
| 12 | செங்குந் |
| 13 | செங்குந் |
| 14 | செங்குந் |
| 15 | செங்குந் |
| 16 | செங்குந் |
| 17 | பாசையூர் |
| 18 | பாசையூர் |
| 19 | புங்கன்கு |
| 20 | புங்கன்கு |
| 21 | நாவாந்து |
| 22 | நாவாந்து |
| 23 | நாவாந்து |
| 24 | நாவாந்து |
| 25 | நாவாந்து |
| 26 | நாவாந்து |
| 27 | நாவாந்து |
| 28 | நாவாந்து |
| 29 | நாவாந்து |
| 30 | நாவாந்து |
| 31 | நாவாந்து |
| 32 | நாவாந்து |
| 33 | அரியாலை |
| 34 | குருநகர் |
| 35 | குருநகர் |
| 36 | குருநகர் |
| 37 | குருநகர் |
| 38 | குருநகர் |
| 39 | குருநகர் |
| 40 | குருநகர் |
| 41 | குருநகர் |

துவிச்சக்கர

| தொ. இல | இறை |
|---|---|
| 1 | பெரிய க |
| 2 | பண்ணை |
| 3 | குருநகர் |
| 4 | செங்குந் |
| 5 | நாவாந்து |
| 6 | அரியாலை |
| 7 | பாசையூர் |
| 8 | புங்கன் உற்பத்தி |
| 9 | பண்ணை சாலை |
| 10 | இந்து வி வுள்ள வ நிலைய |
| 11 | யாழ். ப டிச்சாலை |
| 12 | யாழ். செ சாலை |
| 13 | துரையப் கத்தில் நி தப்படும் (நாள் ஒ |
| 14 | நீதிமன்ற காப்பு நி |
| | மேலதிக |

# இறைச்சிக்கடை குத்தகை - 2021

| இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 202,757.50 |
| பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5000.00 | 64,496.25 |
| பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5000.00 | 230,202.00 |
| பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5000.00 | 262,624.00 |
| பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5000.00 | 172,000.00 |
| பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5000.00 | 83,101.00 |
| பண்ணை கோழிக்கடை | இல.07 | 5000.00 | 967,200.00 |
| பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5000.00 | 90,515.25 |
| பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5000.00 | 968,000.00 |
| பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5000.00 | 980,400.00 |
| செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5000.00 | 152,000.00 |
| செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5000.00 | 280,000.00 |
| செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5000.00 | 405,000.00 |
| செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5000.00 | 410,000.00 |
| செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5000.00 | 350,000.00 |
| செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5000.00 | 710,340.00 |
| பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 885,087.00 |
| பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5000.00 | 547,899.50 |
| புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 101,904.08 |
| புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 347,287.50 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 874,337.63 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5000.00 | 340,000.00 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5000.00 | 280,000.00 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5000.00 | 396,900.00 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5000.00 | 352,800.00 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5000.00 | 248,172.75 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5000.00 | 248,062.50 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5000.00 | 220,665.38 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5000.00 | 245,085.75 |
| நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5000.00 | 384,000.00 |
| நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5000.00 | 65,885.40 |
| நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5000.00 | 12,725.60 |
| அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 79,490.25 |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7000.00 | 631,450.00 |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7000.00 | 618,734.03 |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7000.00 | 447,500.00 |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7000.00 | 475,100.00 |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7000.00 | 525,000.00 |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7000.00 | 585,000.00 |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7000.00 | 450,481.50 |
| குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5000.00 | 240,100.00 |

## ச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் , பொதுச்சந்தைக் குத்தகை - 2021

| இறைச்சிக்கடை | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|
| பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,892,980.00 |
| பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 5,299,820.00 |
| குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 4,525,560.00 |
| செங்குந்தா சந்தை | 10,000.00 | 6,000,150.00 |
| நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 605,000.00 |
| அரியாலை மீன்சந்தை | 1,000.00 | 75,555.00 |
| பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 360,000.00 |
| புங்கன்குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் சந்தை | 2,000.00 | 8,955.05 |
| பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச் சாலை | 1,000.00 | 169,100.00 |
| இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாக வுள்ள வாகனத்தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 189,999.99 |
| யாழ். பழைய பூங்கா சிற்றுண் டிச்சாலை | 1,000.00 | 366,404.85 |
| யாழ். பொது நூலக சிற்றுண்டிச் சாலை | 5,000.00 | 264,600.00 |
| துரையப்பா விளையாட்டு அரங் கத்தில் நிகழ்வுகளின் போது நடாத் தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | 1,000.00 | 13,404.90 |
| நீதிமன்ற துவிச்சக்கரவண்டி பாது காப்பு நிலையம் | 2,000.00 | 182,352.00 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்


தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
மாநகர சபை , யாழ்ப்பாணம்.

(C-574)

# மலையக ஆசிரிய உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது

(ஹற்றன்)

மத்திய மாகாணத்திலுள்ள ஆசிரிய உதவியாளர்களுக்கான நிரந்தர நியமனம் நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.



கொரோனா வைரஸ் தாக்கத்தால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நபர்கள் கலந்து கொள்ளலாம் என்பதால் சிலருக்கு மாத்திரமே நியமனம் நேரில் வழங்கப்பட்டது.

மத்திய மாகாண ஆளுநர், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரை மதியுகராஜா, கணபதி கனகராஜ் மற்றும் இ.தொ.காவின் உப செயலாளர் பாரத் அருள்சாமி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஏனைய ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் தபால் மூலம் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என ஆளுநர் அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தின் தனது ஆசிரியர் பயிற்சியினை நிறைவு செய்து சான்றிதழ்களைப்பெற்று தனது கோவைகளை பூர்த்தி செய்த 419 ஆசிரிய உதவியாளர்களுக்கு இலங்கை ஆசிரிய சேவை தரம் மூன்று, தரம் ஒன்றுக்கு உள்வாங்கப்படவுள்ளனர். (நி-7)

# டயானா கமகேவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## மத்தும பண்டார

(கொழும்பு)



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியில் உறுப்பினர் டயானா கமகேவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்தின் மீதான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினரான டயானா கமகே 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக. வாக்களித்தார்.

இது குறித்து கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே ரஞ்சித் மத்தும பண்டார மேற்கண்டவாறு கூறியுள்ளார். (நி-7)

# அன்ரன் பாலசிங்கத்தை கொல்ல சதிமுயற்சி வழக்கை தள்ளுபடி செய்ய உயர்நீதிமன்றம் மறுப்பு



(சென்னை)

1985ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை கொலை செய்ய முயன்றமை தொடர்பில் பாலன் உட்பட்ட ஏழு பேர் மீது தொடுக்கப்பட்ட வழக்கை ரத்து செய்வதற்கு சென்னை உயர் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

1985ஆம்ஆண்டுசென்னை பெசண்ட் நகரில் உள்ள அவரது வீட்டில் வெடி குண்டு வைக்கப்பட்டது. இந்த குண்டுவெடிப்பில் யாரும்காயமடைய வில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக கந்தசாமி, வி.கே.டி.பாலன், ரஞ்சன், மணவை தம்பி, பவானி, பிரேம்குமார், ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு எதிராக சிபிசிஐடி பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட கந்தசாமி மற்றும் பிரேம்குமார் ஆகியோர் தலைமறைவாகிவிட்டனர். ரஞ்சன், மணவை தம்பி ஆகியோர் இறந்து விட்டனர். ராதாகிருஷ்ணன் ஒப்புநராக மாறியதால் வி.கே.டி பாலன் மட்டும் வழக்கை எதிர் கொண்டுள்ளார்.

இந்நிலையில் 30 ஆண்டுகளாக இந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை என்பதாலும், இந்த வழக்கு தொடர்பான ஆவணங்கள் காணாமல் போய்விட்டதாகவும், இந்த வழக்கில் பாலசிங்கம் உள்ளிட்ட பல முக்கிய சாட்சிகள் இறந்து விட்டதால் தனக்கு எதிரான இந்த வழக்கை இரத்துசெய்ய வேண்டும் என வி.கே.டி. பாலன் சென்னை உயர்நீதிமன்றத் தில் மனு தாக்கல் செய்தார்.

அன்ரன் பாலசிங்கத்தினை கொல்ல முயன்றதாக வி.கே.டி. பாலன் உட்பட்ட ஏழு பேர் மீது 30 ஆண்டுகளுக்குமுன்னர்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் 30 வருடங்களாகியும் எந்தவித முன்னேற்றமும் இல்லாமையால் குறித்த வழக்கை இரத்து செய்யக்கோரி பாலன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

பாலசிங்கம் இறந்துவிட்டார் என்பதற்காக இந்த வழக்கை ரத்து செய்ய முடியாது எனவும், உயிருடன் இருக்கும் பிற சாட்சிகள் மூலமாக வழக்கை நிரூபிக்க முடியும் என நீதிபதி தெரிவித்தார்.

நீண்ட காலதாமதம், ஆவணங்கள் காணாமல் போனது ஆகியவை வ்ழக்கை ரத்து செய்வதற்கு நல்ல காரணம் அல்ல என தெரிவித்த நீதிபதி, இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை சென்னை அமர்வு நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பும் நடைமுறையை 3 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என சைதாப்பேட்டை நீதிபதி நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டார்.

அமர்வு நீதிமன்றம் ஆவணங்களை பெற்று சட்டப்படி விசாரணை நடைமுறைகளை ஆரம்பிக்க உத்தரவிட்ட நீதிபதி, வி.கே.டி. பாலன் மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டார். (நி-7)

# வேலை செய்துகாட்டு,இல்லை அழிந்து விடு சாக்கு போக்குகள் தற்போது பொருந்தாது

## அரசியல் அவதானிகளை ஈர்த்த டுவிட்



(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த, நீதியமைச்சர் மொஹமட் அலிசப்ரி, அந்த திருத்தச் சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு சில மணி நேரத்திற்கு பின்னர் தனது முகநூல் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டிருந்தார்:

"வேலை செய்து காட்டு, இல்லை அழிந்து விடு! சாக்கு போக்குகள் தற்போது பொருந்தாது" என்ற அர்த்தத்தில் அந்த பதிவை இட்டிருந்தார்.

இது 20 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரத்தை பெற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விடுத்த எச்சரிக்கையா? அல்லது முழு அரசாங்கத்திற்கும் வழங்கிய எச்சரிக்கையா? என்பது தெளிவாகப் புரியவில்லை என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் மொஹமட் அலி சப்ரி ஆங்கிலத்தில் வெளியிட்டிருந்த அந்த பதிவின் மொழி பெயர்ப்பு.

"தேசிய பாதுகாப்பு மற்றும் தனிநபர் பாதுகாப்பு, வேகமான பொருளாதார வளர்ச்சி, போதைப் பொருள் மற்றும் குற்றங்கள் ஒழிக்கப்பட்ட சமூகம், தேசிய ஒற்றுமை மற்றும் நட்புறவு, இவற்றை உறுதிப் படுத்துங்கள்!. இல்லை அழிந்து விடுங்கள்! சாக்குப் போக்குகளுக்கு தற்போது காரணங்கள் இல்லை" என அலிசப்ரி தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அலி சப்ரி தனது பதிவில் தனிநபர் பாதுகாப்பு குறித்து கூறியிருந்தாலும் தனிநபர் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது பற்றி எதுவும் கூற வில்லை.

சில நேரம் ஜனாதிபதிக்கு மாத்திரமல்ல, முழு சமூகத்திற்கும் கடும் எச்சரிக்கை விடுக்கும் தேவை அமைச்சர் அலி சப்ரிக்கு இருந்திருக்கலாமோ என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.(நி-7)

# மஞ்சள் விதைகளை கொள்வனவு செய்ய விவசாயத் திணைக்களம் தீர்மானம்

(கொழும்பு)

வர்த்தக நிலையங்களில் நிலவும் மஞ்சள் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, அடுத்த மாதம் முதல் மஞ்சள் விதைகளை கொள்வனவு செய்வதற்கு விவசாயத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, விவசாயிகளுக்கு மஞ்சள் விதைகளை கொள்வனவு செய்வது தொடர்பில் பத்திரிகைகள் மற்றும் விவசாய சேவை மையங்கள் மூலம் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாகவும் விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், விதைகள் மூலம் மஞ்சள் செய்கையினை ஊக்குவிப்பது இதன் நோக்கமெனவும் விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-7)

# தப்பியோடிய இளைஞன் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் தப்பியோடியுள்ள நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.


கொஸ்கம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 26 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த நபர் நேற்றுக் காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில மணிநேரத்திலேயே தப்பிச் சென்றுள்ள நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-7)

# ஒரு வருடத்திற்குள் புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும்-பந்துல குணவர்த்தன

**(கொழும்பு)**

**எதிர்வரும் ஓராண்டு காலப் பகுதியில் புதிய அரசியல் அமைப்பு நிறைவேற்றப்படும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**



20 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் மனதுகளில் என்றுமே ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ இருக்கின்றார் என அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் நிச்சயமாக ஓராண்டு காலப் பகுதியில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை நிறைவேற்றுவார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படும் என்ற நம்பிக்கையில் தாம் 20 ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாக தெரிவித்துள்ளார். (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நீதியரசர்

ஒரு ஊரிலே ஒரு நீதிபதி இருந்தார். அவர் பெயர் ஹம்மாஸ். ஆபிரிககாவைச் சேர்ந்தவர். மிகவும் எளிமையாக வாழ்க்கை வாழ்பவர். தான் பார்க்கின்ற பதவிக்காக அரசாங்கத்திடம் இருந்து ஊதியமே வாங்கிக் கொள்ளவில்லை. பணம் வேண்டாம் என்று விட்டார். சரி... அப்படி என்றால் குடும்பச் செலவுக்கு என்ன செய்தார்?

இரவு நேரங்களிலே புத்தகங்கள் எழுதுவார். அதை விற்று அதிலேயிருந்து வருகின்ற வருமானத்தை வைத்து குடும்பத்தை நடத்தினார். வீட்டு வேலைக்கும் ஆள் யாரையும் வைத்துக் கொள்ளவில்லை. ஆளுக்கு ஒரு வேலையாக செய்து விடுவார்கள்.

ஆற்றுக்குப் போய் தினமும் குடத்திலே தண்ணீர் எடுத்துக் கொண்டு வர வேண்டியது இவருடைய வேலை. மக்கள் எந்த நேரத்தில் வந்தாலும் விசாரித்து தீர்ப்பு வழங்குவார். நடு இராத்திரியில் வந்து கதவைத் தட்டினாலும் அலுப்பதில்லை. மக்களுக்கு அவர் பேரிலே மிகவும் மரியாதை. அந்த ஊர் முதலமைச்சர் அவருக்கு ஒரு பண முடிப்பை பரிசாக கொடுக்க முன்வந்தார். இவர் அதை மறுத்து விட்டார். சரிங்க... உங்களுக்கு ஒரு உதவியாளரையாவது அரசு சார்பாக ஏற்பாடு செய்கின்றேன் என்றார் அவர். அதுவும் வேண்டாம் என்று விட்டார்.சரி...ஒரு வேலை ஆளையாவது அனுப்புகிறேன் என்றார். தேவையில்லை என்று விட்டார். நீங்கள் வெளியே போக வர ஒரு வாகனம் ஏற்பாடு செய்யவா? என்றார். அதுவும் வேண்டாம் என்று விட்டார்.

நீதித்துறையிலே நீங்கள் பல பொறுப்புக்களை வகிக்கின்றீர்கள். அதனால் இரவு நேரத்திலே நீங்கள் நூல்கள் எழுதுவதற்கு அது தடையாக இருக்கின்றது. அரசாங்க நிதியிலிருந்து ஒரு சிறு தொகையையாவது சம்பளமாக வாங்கிக் கொள்ளுங்கள் என்றார். நான் மக்களுக்கு பணியாற்றுகின்றவன். மக்கள் தொகைக்கு ஊதியமாக நான் எதையும் வாங்கிக் கொள்ள விரும்பவில்லை என்று விட்டார். முதலமைச்சர் பார்த்தார் சரி...இதற்கு மேலே இவரை வற்புறுத்தினால் இவர் இந்த பதவியிலேயிருந்து விலகினாலும் வலகிக் கொள்வார். ஒரு நல்ல நீதிபதியை நாம் இழந்துவிடக் கூடாது என்று நினைத்து பேசாமல் இருந்துவிட்டார்.

அந்த ஊரிலே ஒருவர் ஆடு, மாடு வைத்திருந்தார். அவற்றையெல்லம் ஓட்டிக் கொண்டு போய் புல்வெளியில் மேய விடுவார். இவர் உட்கார்ந்து அதை கவனிப்பதற்கு ஒரு நிழலான இடம் தேவைப்பட்டது.அந்தப் புல்வெளி பக்கத்திலே இருந்த ஒரு நடைபாதை ஓரமாக தன்னுடைய நண்பன் ஒருத்தனுடைய வீட்டுக்கு அருகில் ஒரு குடிசை போட்டுக் கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்தார். நண்பன் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை... இது நடைபதை...இதலே குடிசை போடக் கூடாது என்று தடுத்தார். இரண்டு பேருக்கும் தகராறு வந்துவிட்டது. சரி இதற்கு மேலே நமக்குள்ளே வம்பு வேண்டாம். பேசாமல் நீதிபதியிடம் போய் முறையிவோம் என்று முடிவு செய்தார். இரண்டு பேரும் நீதிபதியைத் தேடிப் போனார்கள்.

நீதிபதி யார் என்று அவர்களுக்குத் தெரியாது. நீதிமன்றத்தை நோக்கி அவர்கள் நடந்து போய்க் கொண்டிருக்கின்றார்கள். எதிரிலே ஒருத்தர் தண்ணீர்க் குடத்தை சுமந்து வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்து இந்த ஊர் நீதிபதியைப் பார்க்க வேண்டும்... எங்கே இருப்பார்? என்று கேட்டார்.

நான் தான் நீதிபதி...உங்களுக்குள்ளே என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள் என்றார் அவர். ஐயா... வணக்கம். எங்கள் பிரச்சினையை சொல்கின்றோம்... ஆனால் நீங்கள் தண்ணீர்க்குடத்தை சுமந்து கொண்டு நிற்கின்றீர்கள்... அதைக் கொஞ்சம் கீழே இறக்கி வையுங்கள். பின்பு நிதானமாக நாங்கள சொல்வதைக் கேளுங்கள் என்றார்கள். இதற்கு அந்த நீதிபதி சொன்னார்...இது மக்கள் நடந்து போகின்ற நடைபாதை ...அதனால் நான் வைத்திருக்கின்ற குடத்தை இங்கே இறக்கி வைத்து...இந்த வழியாகப் போகின்ற மக்களுக்கு இடைஞ்சல் கொடுக்க விரும்பவில்லை.அதனால் இது என்னிடம் இருக்கட்டும்.. நீங்கள் சொல்லுங்கள்.. என்றார் அவர்.

சரி ஐயா... நாங்கள் போயிட்டு வருகின்றோம் என்று இந்த இரண்டு பேரும் புறப்பட்டார்கள். என்னங்க இது...உங்கள் பிரச்சினை என்ன என்று சொல்லவில்லை.. அதற்கு தீர்ப்பு சொல்லவில்லை..அதற்குள்ளே புறப்பட்டு விட்டீர்களா? என்றார் நீதிபதி. நீங்கள் தீர்ப்பு சொல்லிவிட்டீர்கள்...அதனால் தான் புறப்பட்டுவிட்டோம் என்றார்கள்.

உண்மைதான்..தன் கையிலே இருக்கின்ற குடத்தையே தரையிலே வைக்க விரும்பாத அவர் நடைபதையிலே குடிசை போடுவதை எப்படி சரி என்று ஒத்துக் கொள்வார்? நீதிபதிக்கு நன்றி செல்லிவிட்டு... தன் நண்பனிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டானாம் அந்த ஆள். நீதியரசர் என்று சொல்கின்றோம் இல்லையா? அதற்கு ஓர் உதாரணம் நீதிபதி ஹம்மாஸ்.

ஒரு சகோதரி மூலமாக (திருமதி.எச்.கோரி) நான் கேள்விப்பட்ட தகவல் இது. அதைத்தான் இப்பொழுது உங்கள் காதிலேயும் போட்டு வைத்திருக்கின்றேன்.

இந்தக் காலத்திலேயெல்லாம் அப்படிப்பட்ட நேர்மையையும்-நியாயத்தையும் பார்ப்பது மிகவும் அபூர்வம். ஒரு பெரிய பதவியிலே இருக்கின்ற ஒருவர். அவருக்கு ஒரு தொழிலதிபர் விருந்து கொடுத்தார்.

விருந்து முடிவிலே ஒரு புதுக் காரை அந்த பெரிய மனிதருக்கு அன்பளிப்பாக கொடுக்க முன்வந்தார்.அந்த பெரிய மனிதர் அதை மறுத்துவிட்டார்.

நான் மக்களுக்கு சேவை செய்வதற்காக இந்தப் பதவிக்கு வந்திருக்கின்றேன். மிகவும் நேர்மையாக செயற்பட விரும்புகின்றேன். அதனால் இலவசமாக யாரிடமிருந்தும் எதையும் வாங்கிக் கொள்வது இல்லை என்று தீர்மானம் செய்திருக்கின்றேன் என்றார். தொழிலதிபர் பார்த்தார் சரி அப்படி என்றால் இந்தக் காரை இலவசமாக நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டாம். ஒரு ரூபாய்க்கு இந்த காரை உங்களுக்கு விற்கின்றேன். ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு இதை வாங்கிக் கொள்ளுங்கள் என்றார். அந்த பெரிய மனிதர் யோசித்தார். தொழிலதிபரை அருகே கூப்பிட்டார். அவரிடம் மெதுவாக அப்படி என்றால் இந்தாங்க பத்து ரூபாய். பத்துக் காரா கொடுத்துடுங்க என்றார்.



# வெளிநாடு

## டத்திய தாக்குதலில் 26 பேர் பலி

ருந்தனர்.

அப்போது அப்பகுதியில் அமைந்தி ருந்த வீடுகளில் பதுங்கி இருந்த தலிபான் பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினர் சென்ற வாகனங்களை குறிவைத்து துப்பாக்கிச்சூடு நடத்தியும், வெடிகுண்டுகளை வீசியும் திடீர் தாக் குதல் நடத்தினர். இந்த திடீர் தாக்கு தலில் பாதுகாப்புப்படையினர் 34 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தலிபான்களின் இந்த கொடூர தாக்கு தலுக்கு பதிலடி கொடுக்க ஆப்கானிஸ் தான் பாதுகாப்புப் படையினர் திட்ட மிட்டனர்.

இதையடுத்து, பஹர்க் மாவட்டத் தில் உள்ள ஒரு மதப் பாடசாலையில் தலிபான் பயங்கரவாதிகள் சிலர் பது ங்கி இருப்பதாக பாதுகாப்பு படையி னருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இந்த தகவலையடுத்து, அந்த மதப் பாடசாலை மீது ஆப்கானிஸ்தான் அரசுப்படைகள் வான்வெளி தாக்குதல் நடத்தினர்.

ஆனால், தாக்குதல் நடைபெறு வதற்கு சிறிது நேரத்திற்கு முன்னரே அந்த மதப் பாடசாலையில் இருந்து தலிபான் பங்கரவாதிகள் வெளியேறி விட்டனர். ஆனால், அரசுப்படையினர் நடத்திய தாக்குதலில் அந்த பாடசா லையில் இருந்த குழந்தைகள் உட்பட பொதுமக்கள் சிக்கிக்கொண்டனர். இந்த வான்வெளி தாக்குதலில் மதப் பாடசாலையில் இருந்து 12 குழந் தைகள் உட்பட 26 பேர் உயிரிழந் தனர். (நி)

## டிந்து விழுந்து ரிழப்பு



பேர் உயிரிழந்தனர். விபத்தில் பலி யான அனைவரது உடல்களும் மீட்கப் பட்டுவிட்டதாக மீட்புக்குழு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் சட்டவிரோத சுரங்கங்களில் ஏற்படும் விபத்துக் களால் ஆண்டுதோறும் நூற்றுக்க ணக்கானோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆப்கானில் தலிபான்கள் தாக்குதல் 20 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலி பான் பயங்கரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் இராணுவ வீர ர்கள் 20 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலி பான்களுக்கு எதிராக இராணு வம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் இரா ணுவம் மற்றும் பொலிஸாரை குறிவைத்து தலிபான்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்துகின்றனர்.



வன்முறை தாக்குதலை குறைப்பதுடன் அமைதி ஒப் பந்தம் செய்ய வேண்டும் என சர்வதேச சமூகமும், ஆப்கா னிஸ்தான் மக்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அமைதி ஒப்பந்தம் தொடர்பாக பேச்சு வார்த்தை நடைபெற்று வரும் நிலையில் வன்முறையும் அதி கரித்து வருகிறது.

சோதனைச்சாவடி மீது நடத் தப்பட்ட இந்த திடீர் தாக்குதலில் 20 வீரர்கள் உயிரிழந்ததாக மாவட்ட ஆளுநர் தெரிவித் துள்ளார். மேலும் 6 பேரை தலிபான்கள் சிறைப்பிடித்து சென்றதாகவும் அவர் கூறி னார். (நி)

## பிரான்ஸில் வேகமெடுக்கும் கொரோனா; 10 இலட்சத்தை நெருங்குகிறது பாதிப்பு

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டில் மேலும் 41 ஆயிரத்துக்கும் அதிகமானோரு க்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அங்கு பாதிப்பு எண்ணிக்கை 10 இலட்சத்தை நெருங்குகிறது.

சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் 210 நாடுகளுக்கும் மேல் பரவியுள்ளது. கொரோனா வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

உலகளவில் கொரோனா பாதிப்பில் முதலிடத்தில் அமெ ரிக்காவும், இரண்டாம் இடத்தில் இந்தியாவும், மூன்றாவது இடத் தில் பிரேசிலும் உள்ளன.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரி சையில் பிரான்ஸ் 7-வது இடத் தில் உள்ளது.

இந்நிலையில், பிரான்ஸ் நாட்டில் மேலும் 41 ஆயிரத் துக் கும் அதிகமானோருக்கு கொரோ னாப் பாதிப்பு உறுதி செய்யப் பட்டுள்ளது.

இதனால் அங்கு வைரஸ் தாக்குதலுக்கு பாதிப்பு அடை ந்தோர் எண்ணிக்கை 9 இலட்சத்து 99 ஆயிரத்து 43 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவால் அந்நாட் டில் 162 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அங்கு கொரோ னாவுக்கு உயிரிழந்தோர் எண் ணிக்கை 34 ஆயிரத்து 210 ஆக அதிகரித்துள்ளது.



கொரோனாவில் இருந்து சுமார் 1.08 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள் ளனர் என அந்நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. (நி)

## கொரோனா சிகிச்சைக்கு ரெம்டெசிவிர் மருந்தை வழங்க அமெரிக்கா ஒப்புதல்




(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் நோயாளிகளின் சிகிச்சைக்கு ரெம்டெசிவிர் மருந்தினை வழ ங்க அமெரிக்கா முழு ஒப்புதல் அளித்துள்ளது.

இம்மருந்து நோய்த்தொற்று சிகிச்சைக்குப் பயன்படுத்தப்பட் டாலும், அதன் முடிவுகள் முழு பலனளிக்கும் வகையில் இல்லை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலில், ரெம்டெ சிவிர் தடுப்பு மருந்துக்கு அமெ ரிக்காவின் உணவு மற்றும் மருந்து கழகம் முழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

"12 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய, குறைந் தது 40 கிலோ உடல் எடை கொண்ட, மருத்துவமனை கவ னிப்பு தேவைப்படும் கொரோனா நோயாளிகளுக்கு இதை பயன் படுத்தலாம்."

இதன்படி, கொரோனா வைர ஸால் பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு, ரெம்டெசிவிர் மருந்து வழங் கப்படவுள்ளது.

கடந்த மே மாதம் முதல் அவசரத் தேவைகளுக்காக மட் டும் ரெம்டெசிவிர் மருந்தை பயன்படுத்த அமெரிக்காவில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

கொரோனாத் தொற்றுக்குள் ளான அமெரிக்க ஜனாதிபதிக்கு ரெம்ட்சிவிர் மருந்து வழங் கப்பட்டது. அதன்பின் அவர் குணமடைந்தார்.

அமெரிக்கா கொரோனா வைரஸ் தொற்றினால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டிய லில் முதலிடத்திலுள்ளது. (நி)

## துருக்கி பொருட்களை புறக்கணிக்க சவுதி அரேபியா முடிவு

(ரியாத்)


துருக்கி பொருட்களை புறக் கணிக்க சவுதி அரேபியா முடிவு செய்துள்ளதால், இரு நாடுக ளுக்கு இடையிலான உறவு மேலும் மோசமடைந்துள்ளது.

இரு ஆண்டுகளுக்கு முன் கொல்லப்பட்ட பின்னர் மோதல் நீடித்து வருகிறது. துருக்கியில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஜவுளி உள்ளிட்ட பொருட்களும் இறக்குமதி செய்யாமல் தாமதம் செய்யப்பட்டதாக புகார் கூறப்பட் டது. இந்த நிலையில் சுப்பர் மார்கெட் கடைகளில் அனை த்து துருக்கி பொருட்களை விற் பனை செய்யாமல் புறக்கணிப் பதாக அறிவித்துள்ளனர்.

அதன் பின்னணியில் சவுதி அரசு இருப்பதாக கூறப்படுகி றது. ஏற்கனவே பொருளாதாரம் நலிவடைந்துள்ள துருக்கி அர சுக்கு இது மேலும் நெருக்க டியை ஏற்படுத்தி உள்ளது. (நி)

# கடல் புறா

# நீதி மண்டபம்




"நீ சொல்லத் தேவையில்லை சேந்தா! பெரும் ஒற்றர்களிடம் இராஜாங்கக் காரியங்களைச் சாதிக்க ராஜவம்ச முத்திரை மோதிரங்களைக் கொடுக்கும் பழக்கம் உண்டு என்பதை நானறிவேன். ஆகவே உன் மாளிகையில் நீ இருந்த கோலத்தைக் கண்டதும் உண்மையை ஊகித்துக் கொண்டேன்" என்ற இளையபல்லவன், "ஆகவே சேந்தா! பீமனின் நடவடிக்கைகள் சந்தர்ப்பவசத்தாலேயே பயனடைந்திருக்கின்றன. பீமன் சிறந்த அறிவாளியாதலால் இந்த நிலைமையைத் தனக்கு அனுகூலமாகச் செய்துகொள்ளவே முயலுவான். ஆகவே உனக்கும் எனக்கும் இன்று விசாரணை இருக்காது" என்றான்.

இளையபல்லவன் சொற்களைக் கேட்ட கூலவாணிகன் மிதமிஞ்சிய பிரமிப்பை அடைந்தான். அத்துடன் திடீரென இளையபல்லவனை நோக்கியும் திரும்பினான். திடீரெனத் திரும்பி "என்ன ! என்ன சொல்கிறீர்கள்!" என்று வினவவும் செய்தான்.

"இன்று நமக்கு விசாரணை இருக்காது" உறுதியுடனும் திட்டவட்டமாகவும் வந்தது இளையபல்லவன் பதில்.

"ஏன்?" என்று மறுபடியும் வினவினான் கூலவாணிகன்.

"நீயும் நானும் முக்கியமல்ல பீமனுக்கு" என்று திட்டவட்டமாகக் கூறினான் இளையபல்லவன்.

"வேறு யார் முக்கியம்?"

"அநபாயர் முக்கியம்." "உண்மைதான்."

"நம்மைக் கொல்வதால் பீனுக்கு இலாபம் இல்லை" "ஏன்?"

"நம்மைக் கொன்றால் சிறந்த ஒரு வலையை இழப்பான் பீமன். புலி தப்பிவிடும்"

"நீங்கள் சொல்வது புரியவில்லை எனக்கு."

"நான் அநபாயனின் இணைபிரியாத் தோழன்" என்று சுட்டிக் காட்டிக்கொண்ட இளையபல்லவன் குரலில் பெருமிதம் மிதமிஞ்சி ஒலித்தது.

"உங்களை இரட்டையர் என்று கூடச் சொல்வதுண்டு" என்று கூலவாணிகனும் ஒப்புக்கொண்டான்.

"ஆம் ஆம். அந்தப் பாக்கியம் எனக்குண்டு. ஆகவே என்னை அழித்தால் அநபாயரை இழுக்கும் காந்தத்தை இழப்பான் பீமன்."

கூலவாணிகன் முகத்தில் தெளிவுக்குறி படர்ந்தது. "உண்மைதான் இளையபல்லவரே! உம்மை வைத்து அநபாயரை இழுக்கப் பார்ப்பான் பீமன்" என்றான்.

இளையபல்லவன் சில விநாடிகள் ஏதோ யோசித்தான். "பீமன் எண்ணம் அப்படித்தானிருக்கும். அநபாயரை அழித்துவிட்டால் வேங்கி நாட்டு அரியணையில் அமர வேண்டிய அரசனை அழித்தாகிவிடும். பிறகு வேங்கி நாட்டில் அரியணையில் போட்டி இருக்காது. சாளுக்கிய விஜயாதித்தன் தாயாதி எதிர்ப்பைப் பற்றி அச்சப்பட அவசியமில்லை. நாடு திடமாகிவிடும் அவனுக்கு.

திடமான வேங்கி நாடு கலிங்கத்துக்கும் தமிழகத்துக்கும் இடையே இருப்பதால் கலிங்கத்துக்கு அது பெரும் அரண் போலாகும். அத்தகைய நிலையை ஏற்படுத்த அநபாயர் சிக்கவேண்டும். அநபாயரைப் பாலூரில் சாதாரணமாகப் பிடித்துவிட முடியாதென்பதைப் பீமன் அறிந்திருக்கிறான். அந்த வேங்கையைப் பிடிக்க என்னைத் தூண்டுதலாக உபயோகப்படுத்துவான். ஆகவே விசாரணை இன்று கிடையாது. தவிர விமோசனமும் இந்தச் சிறையிலிருந்து கிடைக்காது" என்றும் கூறினான்.

"அதென்ன அத்தனை திட்டமாகச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் கூலவாணிகன்.

"நாமிருப்பதால் இந்தச் சிறைக்கூடம் மிக ஜாக்கிரதையாகக் கவனிக்கப்படும். அநபாயர் இங்குள்ள அவர் நண்பர்களை உபயோகப்படுத்தினால் உடனே சிறை செய்யப்படுவார்கள் இங்கிருந்து தப்ப ஏற்பாடு இருக்காது."

"எங்கிருந்து இருக்கும்? ஒரு வேளை விசாரணை நடந்தால் நீதி மண்டபத்திலிருந்து..." என்று கேட்க முற்பட்ட கூலவாணிகனை இடைமறித்த இளையபல்லவன், "அங்கிருந்தும் இருக்காது சேந்தா! நீதி மண்டபம் நான்கு சுவர்களுக்குள் அடங்கியது. அது பலமாகவும் காக்கப்பட்டிருக்கும். அங்கிருந்து நாம் தப்ப முடியாது. வெளிப் புறத்தில்தான் நமக்கு விமோசனம்" என்றான்.

"வெளிப்புறத்திலென்றால்?"

"நமக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால் நீதி மண்டபத்திலிருந்து கொலைக்களத்துக்குச் செல்லும் வழியில் காப்பாற்றப்படலாம். சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால் சிறைக்கு மீண்டும் வரும்போது வழியில் மீட்கப்படலாம். வேறு இடமில்லை" என்று திட்டமாக அறிவித்த இளையபல்லவன், "சேந்தா! இது அனைத்தும் உனக்கு எதற்காகச் சொல்கிறேன் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியாது" என்று பதில் சொன்னான் கூலவாணிகன். "அநபாயர் குறிப்பிட்டிருப்பதுபோல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள நீ தயாராயிருக்க வேண்டும். எதற்கும் என்னைக் கவனித்துக் கொண்டிரு. தவிர சிறையிலிருக்கும் வரையில் சந்தேகத்துக்கு இடம் கொடாமல் நடந்துகொள். மகிழ்ச்சியிருந்தால் வெளிக்குக் காட்டாதே. நீதி மண்டபத்தைவிட்டுக் கிளம்பியதும் என்னையே கவனி. இனி நமக்குள் சம்பாஷணை எதுவும் கிடையாது" என்று முடிவாகச் சொல்லிய இளையபல்லவன், சாளரத்தை விட்டு மீண்டும் அறையின் நடுவுக்கு வந்து மஞ்சத்தில் சாய்ந்து கொண்டான்.

புத்தி பெரிதும் குழம்பிக் கிடந்ததால் என்ன செய்வதென்பதை அறியாத கூலவாணிகன் ஏதேதோ யோசித்துக் கொண்டு பொழுதை ஓட்டினான். இளையபல்லவன் சொல்வதெல்லாம் நியாயமாகவும் காரணங்களை ஒட்டியதாகவும் இருந்தாலும், கூலவாணிகன் மனத்தில் பூரண திருப்தியில்லை. "பீமன் இன்றே நீதி மண்டபத்தில் சந்திப்பதாகத்தானே சொல்லிப் போனான், வார்த்தை தவறும் வழக்கம் அவனுக்கில்லையே?" என்று எண்ணினான்.

ஆனால் விடயங்கள் இளையபல்லவன் சொன்னது போலவே நடந்தன. அன்று முழுவதும் மட்டுமல்ல அதற்கு மறுநாளும் கூட விசாரணை எதுவும் நடைபெறவில்லை. இருவரும் சிறையிலேயே அடைந்து கிடந்தார்கள். அந்த இரண்டு நாளும் இரண்டு யுகங்களாகக் கூலவாணிகனுக்குப் பட்டனவேயொழிய, இளையபல்லவனோ உண்பதையும் உடுப்பதையும் சிறிதும் குறைத்துக் கொள்ளாமல் சகல சௌகரியத்தையும் செய்து கொண்டான்.

மூன்றாவது நாள்தான் அவர்களிருவரையும் நீதி மண்டபத்திற்கு அழைத்துச் செல்லக் காவலர்கள் வந்தார்கள். அவர்களோடு உடனே புறப்பட மறுத்த இளையபல்லவன் தன் பதவிக்கும் வணிகப் பெருந்தகையின் அந்தஸ்துக்கும் தகுந்த ஆடைகள் அளிக்குமாறு கோரினான். அவர்கள் கொண்டு வந்த ஆடைகளைத் தானும் அணிந்து கூலவாணிகனையும் அணியச் சொல்லி காவலரைப் பின் தொடர்ந்தான்.

காவலர் ஒரு பெரிய மூடுவண்டியில் இருவரையும் ஏற்றி நீதி மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள். நீதி மண்டபத்திற்குள் நுழைந்த கருணாகர பல்லவன் அந்த மண்டபத்தைச் சுற்றிலும் ஒருமுறை நோக்கினான். மண்டபம் பூராகவும் ஜனங்கள் கூட்டம் மண்டிக் கிடந்தது.

காவல் மிகவும் பலமாக இருந்தது. ஜனங்களை இருபுறமும் ஈட்டிகளைக் கொண்டு அடக்கி வைத்த வீரர்களைத் தவிர யாரும் தப்ப முடியாதபடி அளவுக்குச் சற்று அதிகமாகவே காவல் இருந்தது அந்த நீதி மண்டபத்தில்.

மண்டபத்தைச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு நீதி ஸ்தானத்துக்கு அருகே வந்ததும் அந்த ஸ்தானத்தின் மீது கண்களை உயர்த்திய கருணாகர பல்லவன் சில விநாடிகள் ஸ்தம்பித்து நின்றான். அந்த ஸ்தானத்தில் அமர்ந்திருந்தது பீமனல்ல. கொடுமையிலும் தந்திரத்திலும் எடுத்த காரியத்தைச் சாதிப்பதிலும் பீமனைவிடக் கோடி மடங்கு உயர்ந்தவனும் தனது பரம விரோதியுமான மனிதன் உட்கார்ந்திருப்பதைக் கண்ட கருணாகர பல்லவனது நெஞ்சில் கூடச் சிறிது அச்சம் உதயமாயிற்று.

(தொடரும்...)

# அரசியலமைப்பு என்பது கல்வெட்டு அல்ல

## காலவோட்டத்துக்கேற்ப மாற்றப்பட வேண்டும்

**(கொழும்பு)**

**அரசியலமைப்பு என்பது கல்வெட்டு அல்ல, காலவோட்டத்துக்கேற்ப, சமூகத்தின் வளர்ச்சிக்கேற்ப அது மாற்றியமைக்கப்பட வேண்டும் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, "அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

தேர்தல்கள் ஆணைக்குழுவிலுள்ள உறுப்பினர் ஒருவர் பக்கச்சார்பான முறையில் செயற்பட்டார். அவரிடம் சுயாதீனம் இருக்கவில்லை.

தேர்தலை நடத்தவேண்டிய இடத்தில் இருந்து கொண்டு தேர்தலுக்கு எதிராக நீதிமன்றம் சென்றார். இவ்வாறு 19 இல் பல குறைபாடுகள் உள்ளன. அச்சட்டம் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது.

ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு இந்த நாட்டில் 42 வருடங்களாக அமுலில் உள்ளது. அரசியலமைப்பு என்பது கல்வெட்டு அல்ல, காலவோட்டத்துக்கேற்ப,சமூகத்தின் வளர்ச்சிக்கேற்ப அது மாற்றியமைக்கப்படவேண்டும்.

அந்த வகையில் புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 9 பேரடங்கிய நிபுணர் குழுவை அமைத்துள்ளோம். அக்குழுவின் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

எனவே, 20 என்பது தற்காலிக ஏற்பாடு. அதனை ஒத்திவைக்கமுடியாது. அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கான ஆரம்பமாகக்கூட எடுத்துக்கொள்ளலாம். முழுமையானதொரு அரசியலமைப்பு நிச்சயம் உருவாக்கப்படும் என அவர் மேலும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (ஐ-4)

# சபாநாயகருக்கா, ஜனாதிபதிக்கா அதிகாரம்? இதுவே 19 இன் நிலைமை - அதாவுல்லா விளக்கம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கு முன்னர் நாட்டில் ஸ்திரமான ஆட்சியொன்றை ஸ்தாபிக்கும் முகமாகவே 20 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், எமது நாட்டுக்கு புதிய அரசியலமைப்பொன்று அவசியம். அது மக்களால் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆனால், நல்லாட்சி அரசாங்கத்தில் சர்வதேச தன்னார்வ அமைப்புகளால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களைத் தான் 19 ஆவது திருத்தச்சட்டமாக நிறைவேற்றினர்.

இதனை மக்கள் உருவாக்கவில்லை. 19 இல் மக்களை ஏமாற்றியதையே இவர்கள் செய்தனர். 1978 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டு வந்திருந்த அரசியலமைப்பில் அவரே பல திருத்தங்களை மேற்கொண்டிருந்தார்.

நிறைவேற்று அதிகார முறை, பிரதமர் ஆட்சி அல்லது எமக்கென்று தனித்துவமான முறைமை இருக்க வேண்டும். அதனை விடுத்து வேறு நபர்களின் தேவைகளுக்கு ஏற்பவே 19 ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

பாராளுமன்றத்திற்கா, சபாநாயகருக்கா? அல்லது ஜனாதிபதிக்கா? அதிகாரம் உள்ளதென நீதிமன்றில் சென்று மன்றாடும் நிலையே 19 இல் காணப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# ஒருவருக்கு கொரோனா

(கொழும்பு)

கம்பஹா பியகமவில் உள்ள MAS ஆடைத் தொழிற்சாலை ஊழியருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் சிகிச்சைக்காக குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க முதலீட்டு வலயத்திலுள்ள ஒரு ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தொற்றுறுதியான நபருடன் தொடர்புடையவர் என்பதால் அவருக்கும் கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளானதாக சந்தேகிக்கப்படுகிறது.

அதன் காரணமாக தம்பதெனிய ஆசிரியர் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். அவருக்கு கொரோனாவின் அறிகுறிகள் காணப்பட்டதால் சிகிச்சைக்காக கடந்த 21 ஆம் திகதி குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பி.சி.ஆர்.பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது.

ஆகவே மேலதிக சிகிச்சைக்காக அவர் கொழும்பிலுள்ள ஐ.டி.எச்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ஐ-4)

# முஸ்லிம்களை ஒதுக்காதீர்கள்

## ஹக்கீம் கோரிக்கை



(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு எதிரான வாதம் நாட்டில் அதிகரித்து வருகின்ற நிலையில், முஸ்லிம்களை ஒதுக்குவது தேசியத்தை கட்டியெழுப்புவதற்கு பாதகமானது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டின் நிலையானதொன்றாகும். நகர்களை இலக்கு வைத்து அதில் திருத்தங்களை மேற்கொள்ளக்கூடாது. நீதித்துறையின் சுயாதீனம் இந்த திருத்தம் மூலம் பாதிக்கப்பட்டுள்ளதை ஓய்வுபெற்ற சட்டத்தரணிகள் சங்கத்தினர் நீதி அமைச்சருக்கு எழுத்து மூலம் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அது தொடர்பில் நீதி அமைச்சரால் எந்த பதிலும் இல்லை. நாம் வரலாற்றில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும். முழு அதிகாரங்களையும் தனித் தலைவருக்கு கொடுப்பது பாரதூரமானது." 19ஆம் திருத்தம் பல பரிமாணங்களை கொண்டது. இதனூடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் பல நீக்கப்பட்டன. புதிய அரசியலமைப்பிற்கு இது வழிவகுத்தது என்றாலும் எதிர்பார்த்த விடயங்கள் இடம்பெறவில்லை.

19 ஆவது திருத்தம் இரு அதிகார மையங்களை கொண்டிருந்தது. ஜனாதிபதியும் பிரதமரும் இரு கட்சியை சேர்ந்தவர்களாக இருந்ததால் பொருத்தமின்மை இருந்தது.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுகின்றனர். அரசியல், கலாசார பொருத்தமின்மை இருந்தது. இன்று ஜனாதிபதிக்கு அதிக அதிகாரமிருக்கிறது.

18 ஆம் திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிக்கவில்லை என்பதை உயர் நீதிமன்ற வழக்கின் போது கூறியிருந்தேன். பிரபலம் ஜனநாயகத்தின் முக்கியங்களை அழித்து வருகிறது. உலக ரீதியில் இதுவே நடந்துள்ளது. பெரும்பான்மைவாதமானது புது வகையான நியாயமான தீர்வுகளை அழிப்பதாக இருக்கும்.

மேலும் முஸ்லிம்களை ஒதுக்குவது தேசியத்தை கட்டியெழுப்புவதற்கான பாதிப்பாகும். பெரும்பான்மை இனவாதம் மிகவும் பயங்கரமானது. சிறுபான்மை இனவாதம் அவ்வாறானதல்ல. வியாபாரத்தில் முஸ்லிம்களுக்கு முன்னிலையில் இருந்தாலும் முஸ்லிம்களுக்கு எதிரான வாதம் அதிகரித்து வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# துணி வழக்கு தீர்ப்பு வெகு விரைவில்

(கொழும்பு)

துணி பகிர்ந்தளிப்பு வழக்கில் 3 வருட சிறைத் தண்டனை பெற்று தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித்வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுச பெல்பிட்ட ஆகியோர் குறித்த குற்றச்சாட்டுக்களில் இருந்து தம்மை விடுதலை செய்யுமாறு கோரி தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி அறிவிப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நேற்று நீதிபதிகளான குமுதினி விக்ரமசிங்க மற்றும் தேவிகா அபேரத்ன ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த மனு மீதான வாய்மூல சமர்ப்பணங்கள் அனைத்தும் அண்மையில் நிறைவடைந்துள்ள நிலையில் ஏதேனும் எழுத்து மூல கோரிக்கைகள் இருப்பின் அவற்றை நாளை மறுதினத்திற்குள் முன்வைக்குமாறு நீதிபதிகள் இரு தரப்பினருக்கும் உத்தரவிட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவுக்கு சொந்தமான 600 மில்லியனுக்கும் அதிகமான நிதியைப் பாவித்து நாடு முழுவதும் உள்ள விகாரைகளுக்கு சில் துணிகளை பகிர்ந்தளித்தமையின் ஊடாக அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக லலித் வீரதுங்க மற்றும் அனுச பெல்பிட்ட ஆகியோருக்கு எதிராக நல்லாட்சியில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ-4)

# 20 ஆவது திருத்தத்தை முஸ்லிம் உறுப்பினர்கள் ஆதரிக்க காரணம் என்ன

## சந்தேகிக்கும் மரிக்கார்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 6 பேர் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள். அவ்வாறு வாக்களித்தமையானது அவர்களுடைய சுயநலத்துக்காகவா? அல்லது முஸ்லிம் மக்களின் நலனுக்காகவா? என யோசித்துப் பார்க்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பு எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தார்.

இந்நாட்டில் பள்ளிகளை உடைப்பதற்கும் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகவும் அவர்களுடைய வியாபாரங்களை இல்லாமல் செய்து, முஸ்லிம்களை மனநோயாளிகளாக மாற்றிய அரசாங்கத்தோடு முஸ்லிம் ஒருவர் எவ்வாறு சேர்ந்து கொண்டார் என்பதில் எங்களுக்கு சந்தேகம் உண்டு.

பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜபக்ஷவின் பக்கம் செல்வதால், அது முஸ்லிம் சமூகம் சென்றதாக அர்த்தமில்லை. எனவே முஸ்லிம் சமூகம் இவர்களுக்கு அடுத்த தேர்தலில் சரியான பதிலை கொடுக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த முஸ்லிம் பிரதிநிதிகள் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள்.

முஸ்லிம்களுடைய பிரச்சினைகளை விற்று, முஸ்லிம்களால் பாராளுமன்றத்துக்கு வந்து தன்னுடைய சுயநலத்துக்காக முஸ்லிம் மக்களை காட்டிக் கொடுத்து ராஜபக்ஷவுடன் செல்வது யாராக இருந்தாலும் அவர்களுடைய எதிர்காலத்தை முஸ்லிம் மக்களே தீர்மானிக்க வேண்டும். எதிர்க்கட்சியிலிருந்தும் முஸ்லிம்களுக்காகவும் பெரும்பான்மை சமூகத்துடன் இணைந்து வாழக்கூடிய சூழலை முஸ்லிம்களுக்கு உருவாக்கவும் உண்மையாக குரல் கொடுக்கின்ற பணிகளை நாம் செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# தமிழர்களின் காணிகள் தொடர்பில் உயர்மட்டக் கலந்துரையாடல்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்ஷவிற்கும் இடையிலான உயர்மட்டக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

முல்லைத்தீவில் தமிழர்களின் பூர்வீகக் காணிகளுக்கு எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாகவே குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், எம். ஏ. சுமந்திரன், கோவிந்தம் கருணாகரன், இரா.சாணக்கியன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-4)

# குணமடைந்தோர் 3664

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 83 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, இதுவரை 3 ஆயிரத்து 664 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளான 14 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2152

### கவின்

அன்பை விதைத்துக் கொண்டே இருப்பேன்...



முளைத்தால் மரமாகட்டும் இல்லையேல் உரமாகட்டும்...!

### அனேஜன்




### கௌதமி

உயிராய் பழகும் பெண் தோழி தாயைப் போன்றவள்...!



உண்மையாய் பழகும் ஆண் நண்பன் தந்தை போன்றவன்...!

### பிரபா

உணர்வுகள் மதிக்கப்படவில்லை என்றால் தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொள்கிறதே தவிர அவர்கள் மீதான அன்பு கொஞ்சமும் குறைவதில்லை

### பிரதீப்

ஆறுதல் சொல்ல தோழி இருந்தால் அழுவதில் கூட ஆனந்தம் உண்டு...!



தூக்கி நிறுத்த தோழன் இருந்தால் விழுவதில் கூட சுகமுண்டு...!

### குட்டி

தூசி விழும் கண்களும் நம்பிக்கை வைக்கும் இதயமும்



எப்பொழுதும் "கலங்கும்"

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சஜித், பொன்சேகா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் இந்த அதிகாரங்களை வேண்டாமெனச் சொல்வார்களா?

## டயானா கமகே கேள்வி

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை கட்டியெழுப்புவார் என்பதில் தனக்கு முழுமையான நம்பிக்கை உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வாக்களித்தேன் அவ்வளவு தான், நான் ஏதேனும் வரப்பிரசாதங்கள் பெற்றிருப்பதாக பலரும் கூறுகின்றனர். அவ்வாறானவர்கள் முடிந்தால் அதனை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இன்று எனது மனச்சாட்சிக்கு இணங்கி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளேன். காரணம் ஜனாதிபதி தேர்தலுக்காக பல கோடிக் கணக்கான பொதுமக்கள் நிதியைச் செலவு செய்துள்ளோம்.

அவ்வாறு ஒரு ஜனாதிபதியைத் தெரிவு செய்து, அவரின் கைகளை கட்டி நீந்துமாறு பார்ப்பது பொருத்தமற்ற ஒன்று.

நாட்டுக்குச் சேவையாற்ற ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் தேவை. ஆகவே கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.

அவர் நாட்டை எதிர்காலத்தில் கட்டியெழுப்புவார். அடுத்தது சஜித் பிரேமதாஸ அல்லது பொன்சேகா போன்ற யாராவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் இந்த அதிகாரங்களை வேண்டாமென கூறுவார்களா?" எனப் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# இணையவழி மூலமும் மருந்துகளை பெறலாம்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் இணையவழி மூலமாக (Online) மருந்து வகைகளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மருந்தகங்களில் இருந்து இணையவழி மூலமாக (Online) மருந்து வகைகளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மருந்தகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார் என்று அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-7)

# ஆலய வழிபாடு

## ஏன்-எதற்கு - எப்படி



## ஆலய வழிபாடு

ஆனால் அதில் பரம்பொருள் உறைந்துள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த புரிதல் ஏற்பட்டு விட்டால் இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்ற இறை ஞானம் வலுப்பெற்று விடும்.

ஆனால் இந்தியாவுக்குள் நுழைந்த பார்சி இன மக்கள் சிந்து நதி பாயும் மக்களை பார்த்து சிந்து என்று அழைத்தனர். நாளடைவில் அது இந்து என்று மாறி நாம் கடைப்பிடித்த சனாதனம் மற்றும் வைதீக இறைநெறிகள் இந்து மதம் என்றாகிவிட்டது.

இதன் மூலம் இந்து மதம் எப்போது யாரால் உருவானது என்று வரையறுத்து சொல்ல முடியாத அளவுக்கு பல ஆயிரம் ஆண்டுகள் தொன்மையானது என்பதை உணரமுடியும். இதனால் தான் இறைவனே மனித சமுதாயத்துக்காக அளித்த ஒரு வழிகாட்டியாக இந்து மதம் கருதப்படுகிறது.

உலகியல் நல்வாழ்வுக்காக இந்து மதம் எண்ணற்ற தத்துவங்களை கூறியுள்ளன. ஆனால் நாம் தான் அவற்றை கண்டு கொள்ளாமல் இருக்கிறோம்.

கோவிலுக்குப் போய் சாமி கும்பிடுவதும் திருவிழாக்கள் நடத்துவதும் நேர்ச்சைகள் செய்வதும் சமயச் சடங்குகள் செய்வதும்... இவை போன்றவையே ஆன்மீகம் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறோம். ஆனால் நம் முன்னோர்கள் நிச்சயமாக இப்படி இருக்கவில்லை.

ஆன்மீகத்தை அறிந்து இருந்தார்கள். ஆலயங்கள் பற்றி புரிந்து இருந்தார்கள். ஆலய வழிபாட்டில் தெளிவு பெற்று இருந்தார்கள்.

உண்மையோடு இறைவனை நாடினார்கள். அதனால் தான் அவர்களால் இன்று நாம் ஆச்சரியப்படும் உன்னதமான வாழ்க்கையை வாழ முடிந்தது. அந்த தடத்தில் நாமும் சென்றால் நமது ஆலய வழிபாடுகள் உண்மையிலேயே அர்த்தம் உள்ளதாக இருக்கும்.

இந்த உலகைப் படைத்தது இறைவன். அவன் இல்லாமல் ஒரு அணு கூட இங்கு அசையாது என்பதை நாம் முழுமையாக நம்ப வேண்டும்.

இறைவன் பார்வைபடாவிட்டால் ஒரு அணுகூட அசையாது என்று இருக்கும் போது அவனையே நினைத்துக் கொண்டிருக்கும் நம்மை நிச்சயமாக இறைவன் கைவிடமாட்டான். நமக்கு என்ன தேவை என்பதை இறைவன் அறிவான்.

இந்த எண்ணத்தோடு நாம் இறை வனிடம் தினம் தினம் சரண் அடைந்து விட வேண்டும். இந்த பக்குவத்தை நம்முள் உருவாக்குவது தான் ஆலய வழிபாடு.

ஆன்மீகத்தில் ஒரு விடயம் நம்மிடம் மாறாமல் பதிய வேண்டுமானால் அதற்கான பயிற்சியும் முயற்சியும் வேண்டும். அந்தப் பயிற்சியையும் முயற்சியையும் ஆலய வழிபாடுகள் தருகின்றன.

இதற்காகவே நம் முன்னோர்கள் ஆலயங்களில் கருவறை, பிரகாரம், இராஜ கோபுரம்,கொடிமரம், உட்பிரகார சந்நிதி என்று ஏற்படுத்தியுள்ளன. இவற்றில் அர்த்தமுள்ள ஏராளமான இரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன.

அதுபோல இறைவனை வழிபடும் போது செய்யப்படும் அபிஷேக ஆராதனை, மலர் அலங்காரம், திருநீறு, தீர்த்தம், வாகனம், தீபம், தேர், நைவேத்தியம் போன்ற எல்லா விடயங்களிலும் இரகசியங்கள் பொதிந்துள்ளன.

அப்படி என்ன பெரிய இரகசியம் என்று ஒரே வரியில் கேட்டு விடாதீர்கள். அடுத்தடுத்து வரும் பக்கங்களில் அந்த இரகசியங்களை பார்க்கப்போகின்றோம்.

# செய்தித்துளிகள்

## ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 691 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டவிதிமுறைகளை மீறி பயணித்த குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 88 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார். இதற்கமைய, தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்ட விதிமுறைகளை மீறி பயணித்த குற்றச்சாட்டில் இதுவரை 691 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.அத்துடன் குறித்த காலப் பகுதியில் ஊரடங்கு சட்ட விதி முறைக்களை மீறி பயணித்த 92 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (நி-7)

## 60 அடி பள்ளத்தில் பாய்ந்த வான் சாரதி உட்பட இருவர் காயம்



(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா பட்டல்கல பகுதியில் வான் ஒன்று 60 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமுற்று டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.ஹற்றனிலிருந்து புலியாவத்தை பகுதிக்கு சென்ற வான் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் பாதையை விட்டு விலகி சுமார் 60 அடி பள்ளத்தில் காசல்ரீ நீர்தேக்கத்திற்கு நீர் வழங்கும் டிக்கோயா ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.விபத்தில் சாரதி மற்றும் வானில் பயணித்த ஒருவருமாக இருவர் காயமுற்று டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணையை ஹற்றன் பொலிஸார் மேற்கொள்கின்றனர். (நி-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 240 | 140 |
| பச்சைமிளகாய் | 140 | 160 | 150 | 150 |
| தக்காளி | 100 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 100 | 80 |
| கோவா | 150 | 130 | 120 | 120 |
| கரட் | 120 | 180 | 170 | 200 |
| பூசணி | 60 | 40 | 50 | 50 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 70 | 80 |
| சின்னவெங்காயம் | 200 | 220 | 200-260 | 240 |
| பெரியவெங்காயம் | 180 | 140 | 120-140 | 140 |
| பாகற்காய் | 180 | 260 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 100 |
| பயற்றங்காய் | 160 | 180 | 100 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 90 | 100 | 80 |
| கறிமிளகாய் | 250 | 240 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 180 | 180 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 80 | 250 | 50 | 40 |
| தேசிக்காய் | 150 | 150 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 250 | 240 | -- | 280 |
| முள்ளங்கி | 80 | 60 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 80 | -- | -.- |




## துணிச்சலான சிறுவன்



ஒரு ஊரில், சிறுவன் ஒருவன் மிகவும் சுட்டித் தனமாக இருந்தான்.

ஒருநாள் அவனும் அவனது நண்பர்களும் சேர்ந்து ஒரு மரத்திலே ஏறி, தலை கீழாகத் தொங்கி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆபத்தான இந்த விளையாட்டைப் பார்த்த அந்தப் பையனுடைய தாத்தா, கீழிறங்கி வாருங்கள் என்று சப்தம் போட்டார்.

அவர்கள் வந்ததும், இந்த மரத்திலே ஒரு பேய் இருக்கிறது.

அதனால் கீழேயே விளையாடுங்கள் என்று பயமுறுத்தினார். இதைக் கேட்டு எல்லா சிறுவர்களும் பயந்து விட்டார்கள்.

ஆனால், சுட்டிப் பையன் சரி சரி என்று தலையை ஆட்டிவிட்டு, மறுபடியும் மரத்திலே ஏற ஆரம்பித்தான்.

அவனது நண்பர்கள், ஏறாதே பேய் உன்னை அடித்துவிடும் என்று கத்தினார்கள்.

இந்த மரத்திலே பேய் இருந்திருந்தால் இந்நேரத்திற்கு அது நம்மை அடித்துக் கொன்றிருக்கும்.

தாத்தா நம்மைப் பயமுறுத்தியிருக்கிறார் என்று கூறினான்.

அதற்கு மற்ற சிறுவர்கள், உன் தாத்தா சொன்ன போது சரி என்று சொன்னாய் அது ஏன்? என்று கேட்டனர். எதிர்த்துப் பேசினால் அவர் மனது கஷ்டப்படுமே.

அதனால் தான் அவரை சமாதானப்படுத்த சரி என்றேன் என்று நண்பர்களிடம் கூறிக்கொண்டே மரத்தில் ஏறினான்.

**நீதி : தைரியத்துடன் இருத்தல் வேண்டும்.**

## மகா அலெக்சாண்டரின் வரலாறு

### குதிரைப் பாய்ச்சல்

03


அலெக்சாண்டரும் குதிரையும்

அரண்மனைத் தோட்டத்தில் கட்டி வைத்து விளையாடப் போகிறானா? சிறுவர்கள் பங்கேற்கும் விளையாட்டா இது? மாபெரும் வீரர்கள், வீர பத்திரன் பேரன்கள் எல்லாம் சரிந்து விழுந்திருக்கிறார்கள்.

ஒரு சிறுவனா அடக்கப் போகிறான் அந்தச் சண்டிக்குதிரையை? ஹூம், என்ன செய்வது? மன்னருடைய வாரிசு.

வாய் விட்டுச் சிரித்தால் தலையே போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆரவாரம், கூச்சல், ஆர்ப்பாட்டம். அலெக்சாண்டரின் கவனம் குதிரை மீது மட்டுமே இருந்தது. சுற்றிலும் உள்ள கூட்டம், மன்னரான தந்தை, இதற்கு முன்னால் தோற்று அடிவாங்கி நிற்கும் வீரர்கள்.

எதைப் பற்றியும் சிந்திக்கவில்லை அவன்.

சில நொடிகளில் அந்தக் குதிரையை எதிர்த் திசையில் திருப்பி நிறுத்தினான். பிறகு, ஒரே தாவு. மின்னல் வேகத்தில் குதிரை மீது ஏறிவிட்டான்.

'ஆ, என் மகனே!' வாய் விட்டுக் கூச்சல் போட்டுவிட்டார் மன்னர் பிலிப். அரங்கத்தில் இருந்த அத்தனை பேரும் துள்ளி எழுந்தார்கள்.

அந்தக் குதிரையின் மீது அமர்ந்தபடியே மைதானம் முழுவதையும் ஒருமுறை சுற்றி வந்த பிறகு சர்வ சாதாரணமாக தாவிக் குதித்து இறங்கினான் அலெக்சாண்டர்.

'பிலிப் ஓடோடி வந்தார். மகனே என் சமர்த்து. என்ன செய்தாய்? எப்படிச் செய்தாய்? சொல், சொல்.'

தோள்களைக் குலுக்கிக்கொண்டே பதிலளித்தான் அலெக்சாண்டர்.

'அப்பா, அந்தக் குதிரை வேண்டுமென்றே சண்டி செய்யவில்லை.

சூரிய ஒளி அதன் கண்களில் விழுந்து அதை வெறி கொள்ளச் செய்திருக்கிறது.

குதிரையை எதிர்த் திசையில் செலுத்தினேன். ஒத்துழைத்தது. அவ்வளவுதான்.'

குதிரை அடக்குவதை வெறுமனே வேடிக்கை பார்க்க வந்த அந்த அலெக்சாண்டர் மாவீரன் அலெக்சாண்டராக உருமாறத் தொடங்கியது அந்தப் புள்ளியில் இருந்துதான்.

இனி அந்தப் புள்ளிக்குக் கொஞ்சம் முன் சென்று பார்த்து விட்டு வரலாம்.

(தொடரும்)

கெட்ட எண்ணம் படைத்தவர்களிடம் இருந்து விலகியே இருப்பது மனதைப் பாதுகாக்கும்
– புருஷோத்தமானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யூதாஸுகள் இருக்கும்வரை நல்லோர் வதைபடுவர்!

இதுவரை பேசுபடுபொருளாக இருந்த கொரோனாத் தொற்றைத் தாண்டி 20ஆவது திருத்தச் சட்டமூலம் பேசுபடு பொருளாயிற்று.

எப்பாடுபட்டும் 20ஆவது திருத்த சட்ட மூலத்தை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்த ஆட்சியாளர் களின் இலக்கு நிறைவேறியமை காரணமாக 20ஆவது திருத்த சட்டமூலம் பேசுபடுபொரு ளாகக் காரணமாயிற்று.

தனிமனிதருக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்குவதற்கு பாராளுமன்றம் என்ற ஜன நாயகத்தின் தாங்கு தூண் அனுமதி அளித்த தெனும்போதுதான், நெஞ்சு பொறுக்கவில்லை.

யார் ஆட்சியில் இருந்தாலும் யார் ஆச னத்தில் இருந்தாலும் யார் எந்தப் பக்கமாக இருந்தாலும் பொதுவான தர்மம் என்று இருந்தாக வேண்டும்.

அந்தப் பொதுத் தர்மத்தைப் பாதுகாப்பது என்ற விடயத்தில் அனைவரும் உறுதியாக இருப்பது அவசியம்.

அத்தகையதொரு அடிப்படைத் தத்துவம்; இருந்திருக்குமாயின், 20ஆவது சட்டமூலம் நாட்டுக்கு உகந்ததல்ல என்ற முடிவை அனைத் துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் எடுத் திருப்பர்.

ஆனால் அதுதான் ஆகவில்லை. மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர் களில் சிலர் ஜனநாயகப் பண்பைப் பாதுகாக்க வேண்டுமென நினைக்காமல், தத்தம் சுய நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட்டனர்.

இதனால் ஜனநாயக நாட்டில் தனி மனித அதிகாரம் மேலோங்குகின்ற அவல நிலைமை தோன்றியுள்ளது.

என்ன செய்வது இயேசு பிரானுடன் இருந்த யூதாஸ் வெறும் வெள்ளிக்காசுகளுக் காக இயேசு பிரானைக் காட்டிக் கொடுக்கின்ற கயமைத்தனத்தைச் செய்தான் அல்லவா?

யூதாஸின் கயமைத்தனங்கள் காட்டிக் கொடுப்பாக, பக்கச்சார்பாக இன்னமும் தொடர் கிறது.

ஆம், 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்குவதில்லை என்று சில அரசி யல் கட்சிகள் தீர்மானித்த பின்னர் அந்தக் கட்சி சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அந்தத் தீர்மானத்தைத் தாண்டி, 20 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்கினர் எனும்போது இவர்களே யூதா ஸின் பணிகளைத் தொடர்கின்றனர் எனக் கூறுவதில் தவறில்லை.

வெள்ளிக் காசுகளுக்காக இயேசு பிரா னைக் காட்டிக் கொடுத்து அவரை சிலுவை சுமக்க வைத்த யூதாஸ், ஈற்றில் தன் உயிரை மாய்த்துக் கொண்டான்.

ஆக, 20ஆவது திருத்த சட்டமூலத்தினூ டாக தனி மனிதரிடம் ஆட்சி அதிகாரம் சென்ற டைவதற்குத் துணை புரிந்தவர்கள் என்றோ ஒருநாள் வருந்துவார்கள்.

அப்போது அவர்களைக் காப்பாற்றுவதற்கு தர்மதேவதை அருகில் இருக்கமாட்டார் என் பது மட்டும் உண்மை.

# 20 ஐ பாதுகாக்க தேரர்களை புறந்தள்ளிய அரசாங்கம்-மத்தும

(கொழும்பு)

**சிங்கள பௌத்த அரசாங்கம் என்று தம்மைக் கூறிக்கொண்டவர்கள் பௌத்த தேரர்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்காமல், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியிருப்பது பலர் மத்தியிலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டினார்.**

அதேவேளை, அர சியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் ஜன நாயகத்தின் அழிவிற் கான ஆரம்பம் என்பதைப் போன்றே, ராஜபக்ஷ யுக த்தை முடிவிற்குக்கொ ண்டு வருவதற்கான ஆர ம்பமும் ஆகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள ஐக் கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியால யத்தில் நேற்று வெள்ளிக் கிழமை ஏற்பாடு செய்யப் பட்டிருந்த ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்துகொ ண்டு கருத்து தெரிவிக் கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியலமைப்பிற் கான 20 ஆவது திருத் தம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டதுடன் நாட் டின் பாராளுமன்ற ஜனநா யகத்தின் வீழ்ச்சி அல் லது அழிவு ஆரம்பமாகி யிருக்கிறது என கூறமு டியும்.

1978 ஆம் ஆண் டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன வினால் கொண்டு வரப் பட்ட அரசியலமைப்பை நீக்கவேண்டும் என்று சுமார் 40 வருடகாலமாக தற் போது ஆளுந்தரப்பில் இருப்பவர்கள் குரலெழு ப்பி வந்திருக்கிறார்கள். அதன்பின்னர் ஆட்சி பீடமேறிய ஜனாதிபதிகள் அனைவரும்நிறை வேற் றதிகார ஜனாதிபதி முறை நீக்கப்படும் என்பதையே அவர்களது முதன்மை யான வாக்குறுதியாக வழங்கியிருந்தனர்.

எனினும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் கொண்டுவரப்பட்ட நிறை வேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண் டும் என்று கூறியவர்கள் அனைவரும், இப்போது அதையும் விட உயர் வான அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்கும் வகையில் 20 ஆவது திரு த்தத்தை நிறைவே ற்றிக் கொண்டிருக்கிறார் கள்.

இதனூடாக பாராளு மன்றம் மற்றும் பிரதமர் வசமிருந்த அதிகாரங்கள் நீக்கப்பட்டு, அவை ஜனா திபதியிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. அமைச்சர வையை அவர் தன்னிச் சையாகவே நியமிக்க முடியும். மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதி களை உள்ளடக்கிய பாரா ளுமன்றத்தை அவர் விரு ம்பும் பட்சத்தில் இரண் டரை வருடங்களுக்குள் ளாக கலைக்க முடியும். அதேபோன்று எம்மால் உருவாக்கப்பட்ட சுயா தீன ஆணைக் குழுக்க ளால் நாட்டின் ஜனநாய கம் உறுதிப்படுத்தப்பட் டது. எனினும் தற்போது 20 ஆவது திருத்தத் தின் ஊடாக அவற்றுக்கான உறுப்பினர்களை நிய மிக்கும் அதிகாரம் ஜனா திபதிக்கு வழங்கப்பட்டி ருக்கிறது. இதற்காகவா இந்த நாட்டுமக்கள் கோட் டாபய ராஜபக்ஷவிற்கு தமது வாக்குகளை வழ ங்கினார்கள்? ராஜபக்ஷ குடும்பத்தினர் கற்கால த்தை நோக்கி நாட்டைக் கொண்டு செல்வதற்கே முற்படுகின்றனர்.

கடந்த காலத்தில் பௌத்த, கத்தோலிக்க மதத் தலைவர்கள் உள் ளடங்கலாக அனைத்துத் தரப்பினரும் 20 ஆவது திருத்தம் வேண்டாம் என்றும், புதிய அரசியல மைப்பே தேவை என் றுமே வலியுறுத்தினர். எனினும் "சிங்கள பௌத்த அரசாங்கம்" என்று தம் மைக் கூறிக்கொண்டவர் கள் முஸ்லிம் பாராளு மன்ற உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியிருப்பது பலர் மத்தியிலும் அதிருப் தியை ஏற்படுத்தியிருக் கிறது. நாம் ஒரு இன வாதக்கட்சி அல்ல. ஆனால் இன்றளவிலே இனவாதக்குழு வொன்று பௌத்த தேரர்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்காமல், தமது தேவைக்கேற்றவாறு செயற்படுகின்ற நிலை உருவாகியிருக்கின்றது.

எனினும் இந்த 20 ஆவது திருத்தம் ஜன நாயகத்தின் அழிவிற் கான ஆரம்பம்என்பதைப் போன்றே, ராஜபக்ஷ யுக த்தை முடிவிற்குக் கொ ண்டு வருவதற்கான ஆர ம்பமும் இதுவே என்று நாங்கள் கூறிக்கொள்ள விரும்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித் தார். (ஜ-4)

# புலிகளால் தேரர்கள் மீதான தாக்குதல் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

1987 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலை புலி கள் அமைப்பினால் பௌத்த தேரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக் குமாறு பணிப்புரை விடு க்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரினால் பதில் பொலிஸ்மா அதிப ருக்கு நேற்று இவ்வாறு பணிப்புரை விடுக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய, குறித்த சம்பவத்துடன் தொட ர்புடைய நபர்களிடம் வாக்கு மூலம் பெற்று, அது தொடர்பில் விசா ரணைகளை முன்னெ டுக்குமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், குறித்த அறிக்கையை 2 வார த்திற்குள் சமர்ப்பிக்கு மாறும் அறிவுறுத்தப்பட் டுள்ளது. (நி-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## அன்பு தான் வாழ்க்கை

❖ நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவிபுரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான்.

❖ அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் நமக்குத் தேவையில்லை. வளர்ச்சி அடைவதும் அன்பு செலுத்துவதுமே வாழ்க்கை. அதுவே வாழ்க்கை நியதி.

❖ மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும், பிரம்மச்சரியமும், வாழ்க்கையின் அடிப்படை லட்சியங்களாக நமக்குத் தேவைப் படுகின்றன.

❖ கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப் படும் அந்த விடயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணம்ஆகாமல் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கும்.

❖ அனைத்து தேவைகளையும், துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது.

# விஜய், மணீஷ் பண்டே மிரட்டல் ராஜஸ்தானை சிதறடித்தது ஐதராபாத்




ஐ.பி.எல். தொடரின் 40 ஆவது லீக் ஆட்டம் நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்றது. இதில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கெதிராக சன் ரைசர்ஸ் ஐதராபாத் டாஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன் படி ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ராபின் உத்தப்பா, பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

ராபின் உத்தப்பா 19 ரன்னிலும், சஞ்சு சாம்சன் 36 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். பென் ஸ்டோக்ஸ் 30 ரன், பட்லர் 9 ரன், ஸ்மித் 19 ரன், ரியான் பராக் 12 பந்தில் 20 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

இறுதியில், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 154 ரன்கள் அடித்துள்ளது. ஆர்ச்சர் 16 ரன்னும், திவாட்டியா 2 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

ஐதராபாத் அணியில் சேர்க்கப்பட்ட ஹோல்டர் 4 ஓவரில் 33 ரன்கள் விட்டுக் கொடுத்து 3 விக்கெட் வீழ்த்தினார்.

155 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஐதராபாத் அணி களமிறங்கியது. டேவிட் வார்னர், பேர்ஸ்டோவ் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினர்.

வார்னர் 4 ரன்னில் வெளியேறினார். அவரை தொடர்ந்து பேர்ஸ் டோவ் 10 ரன்னில் வெளியேறினார். இருவரையும் ஆர்ச்சர் வெளியேற்றினார். 16 ரன்னுக்குள் 2 விக்கெட்டை இழந்து ஐதராபாத் திணறியது.

அடுத்து களமிறங்கிய மணீஷ் பாண்டேவு, விஜய சங்கரும் நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தனர்.

மணீஷ் பாண்டே கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்தி பவுண்டரி, சிக்சர்களாக விளாசினார். அவருக்கு விஜயசங்கர் நன்கு ஒத்துழைப்பு வழங்கினார். இருவரும் அரை சதமடித்து அசத்தியதுடன், 140 ரன்கள் சேர்த்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

இறுதியில், ஐதராபாத் அணி 18.1 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 156 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. மணீஷ் பாண்டே 8 சிக்சர், 4 பவுண்டரியுடன் 83 ரன்னும், விஜயசங்கர் 6 பவுண்டரியுடன் 52 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர். ஆட்ட நாயகன் விருதை மணீஷ் பாண்டே பெற்றார். (4)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஓவர் கேம் கரப்பந்தாட்டப் போட்டி உடுப்பிட்டி சிவகுமரன் அணி சம்பியன்




கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்திய ஓவர் கேம் கரப்பந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி சிவகுமரன் அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதன் இறுதியாட்டம் கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் அணியை எதிர்த்து மாலைசந்தை மைக்கல் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய உடுப்பிட்டி சிவகுமரன் அணி 48:30 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (4-60)

# ஜாம்பவான் கபில் தேவ் மாரடைப்பால் வைத்தியசாலையில்





இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில் தேவ், மாரடைப்பால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

61 வயதான கபில் தேவ், டில்லியில் உள்ள ஒரு வைத்தியசாலையில் ஆஞ்சியோ பிளாஸ்டி அறுவை சிகிச்சை செய்து வருவதாகக் கூறப்படுகிறது. நீரிழிவு தொடர்பான சுகாதார பிரச்சினைகளையும் கொண்டிருந்த கபில் தேவ், விரைவாக மீண்டு வர வேண்டுமென அவரது ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர். அவரது உடல் நிலை குறித்த கூடுதல் விபரங்கள் வெளியாகவில்லை.

1983 ஆம் ஆண்டு இந்திய அணி முதல்முறையாக உலகக்கிண்ணம் வெல்லும் போது, சகலதுறை வீரரான கபில் தேவ் அணித்தலைவராக செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# இரண்டாவது முறையும் கொரோனா முக்கிய போட்டியிலிருந்து விலகும் ரொனால்டோ



உலகின் முன்னணி கால்பந்து வீரர் ரொனால்டோவுக்கு இரண்டாவது முறையாக கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

கடந்த ஒக்டோபர் 13 ஆம் திகதி ஐரோப்பிய அணிகளுக்கு இடையிலான தேசிய லீக் தொடரில் பங்கேற்ற போர்த்துகல் கப்டன் ரொனால்டோவுக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் முதன் முறையாக கொரோனா உறுதியானது.

இதனையடுத்து, சுவீடன் அணிக்கு எதிரான போட்டியிலிருந்து ரொனால்டோவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது.

பின்னர், கடந்த வாரம் ஏர் அம்புலன்ஸ் மூலம் இத்தாலிக்கு சென்ற ரொனால்டோ, தான் நலமாக இருப்பதாகவும் எந்த அறிகுறியும் இல்லை எனக் கூறினார்.

ஒன்பது நாட்களுக்குப் பிறகு 35 வயதான ரொனால்டோவுக்கு மீண்டும் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவருக்கு கொரோனா இருப்பது இரண்டாவது முறையாக உறுதியானது.

ரொனால்டோ தொடர்ந்து கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதால் அடுத்த வாரம் சம்பியன்ஸ் லீக்கில் பார்சிலோனாவுடன் ஜுவண்டஸ் மோதும் போட்டியை தவறவிடுவார் எனக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக ரசிகர்கள் கடும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். (4)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# தகுதிகாண் போட்டி இரத்து

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இன்று மற்றும் நாளை 25 ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த தேசிய குழாமுக்கு தெரிவுக்கான தகுதிகாண் போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மெய்வல்லுநர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்திய கொரோனா வைரஸின் தாக்கம் காரணமாக சுகததாச விளையாட்டரங்கு அமைந்துள்ள கொழும்பு-13 புளூமெண்டல் பகுதியில் குறித்த தினங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் தகுதிகாண் போட்டிகள் நடத்த முடியாது போயுள்ளதாக இலங்கை மெய்வல்லுநர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (4)

## 24 நபர்களுக்கு...

டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப் படுத்தல் முகாமில் தனிமைப்படுத்திருந்த நபர்களில் 24 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள் வேலங்குளம் விமானப்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ம-3,250)

## யாழில் மூவரு...

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பலாலி மற்றும் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்களில் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ம-3)

## மயூரனை நீக்கு...

கிழமை இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

மகேந்திரன் மயூரனை யாழ்.மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானத்தை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் எடுத்திருந்தது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சார்பாக யாழ்.மாநகர சபைக்குத் தெரிவாகிய மகேந்திரன் மயூரன் பங்காளிக் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டமையால் யாழ்.மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து அவரை நீக்குமாறு யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரிடம் அந்தக் கட்சி கோரிக்கை விடுத்தது.

இதற்கமைய மகேந்திரன் மயூரனின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக தெரிவத்தாட்சி அலுவலரால் அண்மையில் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பை ஆட்சேபித்து யாழ். மாநகர சபை உறுப்பினர் மகேந்திரன் மயூரன் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் சட்டத்தரணி மணிவண்ணன் ஊடாக மனுத்தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ம-3,18)

## அரவிந்தகுமாரை...

ணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

அத்துடன், தமது கட்சியின் பாராளுமன்ற குழு இது தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரவிந்தகுமார் தொடர்பாக, அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்குமாறு அவரது கட்சியான மலையக மக்கள் முன்னணியிடம் கேட்டுக் கொள்ளப்படும் என்றும், மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.(ம-3)

(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)

## யாழில் பல்வேறு...

அச்சுவேலி ஆகிய இடங்களில் வீதிகளில் செல்வோரை தள்ளி விழுத்தி காயப்படுத்தி நகை கொள்ளையில் ஈடுபட்டு வந்த உடுவில் லைச் சேர்ந்த நால்வர் நேற்றைய தினம் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 10 பவுண் நகை, ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் 3 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் மீட்கப்பட்டது.

கடந்த மாதம் அச்சுவேலி பிரதேசத்தில் சிறு பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகட்டை சூட்சுமமாக மாற்றிப் பயணித்ததோடு மோட்டார் சைக்கிளை தள்ளி விழுத்தி, மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை காயப்படுத்தி அவர்கள் அணிந்திருந்த நகைகளை கொள்ளையிடித்த சம்பவம் போன்ற ஆறுக்கும் மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வரே நேற்றைய தினம் கைது செய்யப்பட்டவர்களாவர்.(ம-3)

## சவேந்திர சில்வா...

நேற்று அரசாங்கத்திடம் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய சஜித் பிரேமதாஸ, அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக்கல் பொம்பியோவிடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அடுத்த வாரம் பொம்பியோவுடன் நேருக்குநேர் பேச்சுவார்த்தை நடத்தும் போது வெளியுறவுத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தன இந்த கோரிக்கையை விடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-3)

## ஊரடங்கை...

குறித்து எந்த திட்டமும் இதுவரை இல்லை என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் 44 பொலிஸ் பிரிவுகளில் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப் படுத்தல் ஊரடங்கு சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் மக்கள், வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி செயற்படுதல் அவசியம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (ம-3)

## + 866...

அதன்படி நாட்டில் பதிவான நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கை 7,153 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று பதிவாகியுள்ள 866 தொற்றாளர்களில் 752 பேர் பேலியகொட மீன் சந்தையில் இருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தப்பட்ட மையங்களில் இருந்து 48 பேர், மினுவாங்கொட ஆடைத் தொழிலாளர்களின் 40 தொடர்பாளர்கள், பேருவளை மீன்பிடி துறைமுகத்தைச் சேர்ந்த 20 பேர் மற்றும் காலி மீன்பிடி துறைமுகத்தில் 5 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி மினுவாங்கொட தொற்று அலையில் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 3,682 ஆக அதிகரித்தது.

3,495 பேர் தற்போது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா வைரஸிலிருந்து 83 பேர் குணமடைந்தனர். குணமடைந்தவர்கள் எண்ணிக்கை 3,644 ஆக அதிகரித்துள்ளது.

வைரஸ் தொற்று சந்தேகத்தில் 426 நபர்களும் கண்காணிப்பில் உள்ளனர்.(ம-3)

## கொரோனா...

தணி பரவலாக உள்ளது.

இந்த பரவல் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கியுள்ளது. இது ஒரு சமூகப் பரவலுடன் ஒப்பிடுமளவுக்கு உள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தால் மேற்கோள் காட்டப்பட்டுள்ள கொரோனா வைரஸ் சமூகப் பரவலின் வரையறை யின்படி, தற்போதைய நிலைமை சமூக பரவலுக்கு உட்பட்டது அல்ல. தற்போது கோவிட் - 19 நோயாளிகள் ஒரு முக்கிய கொத்தணியின் இரண்டாம் நிலையில் அடையாளம் காணப்படுகின்றனர்.

நாட்டில்வைரஸ் பரவும் அபாயம் மிக அதிகம் உள்ளது. அதனால் பொதுமக்கள் தீவிரமாக அக்கறை செலுத்த வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவல் கொத்தணி அதிகரிக்கும் போது, சமூகத்தில் பரவுவதற்கான சாத்தியம் அதிகளவு உள்ளது.

எனினும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் அனைவரையும் சுகாதார அதிகாரிகளால் அடையாளம் காண முடியாது" என்றும் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவ வல்லுநர் சுதத் சமரவீர தெரிவித்தார். (ம-3)

## பல...

அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தின் பயகல, பேருவளை, அளுத்கம பொலிஸ் பிரிவுகளில் எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 5 மணி வரையும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## 20ஐ ஆதரித்த...

பினர்கள் சிலர் கடித மொன்றை கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் நேற்று கையளித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் டயனா கமகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 8 பேர் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்றனர்.

இந்தநிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் களான ஹரின் பெர்னாண்டோ, நளின் பண்டார, ஹெக்டர் அப்புஹாமி, சுஜித் பெரேரா, நிரோஷன் பெரேரா, மயந்த திஸாநாயக்க, முஜிபுர் ரஹ்மான், ரோஹினி விஜேரத்ன மற்றும் கின்ஸ் நெல்சன் ஆகியோர் இணைந்து கட்சியின் பொதுச் செயலாளருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

அவர்களைக் கட்சிக்குள் வைத்திருப்பதா? அல்லது வெளியேற்றுவதா? என்பது பற்றி மிக விரைவில் முடிவொன்றை எடுக்கும்படியும் குறித்த உறுப்பினர்கள் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர். (ம-3)


மெகா பவர்
திகதி 23/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0651
H 12 21 32 50 59

நீரோகா
திகதி 23/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0714
லக்னம்: கும்பம் 09 19 24 63

மஹஜன சம்பத
திகதி 2020/10/23
சீட்டிழுப்பு இலக்கம் 4284
E 0 4 4 1 1 3

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 23-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2579
W 02 38 75 79

தன நிதானய
திகதி - 2020.10.23
சீட்டிழுப்பு இலக்கம் - 332
A 18 28 52 60

ராசி
திகதி 23/10/2020
வெற்றி வாரம் 2961
சுப்பர் ஜக்பொட் ரூ. 31,79,237
வர்ணம் கரு நீலம்
03 14 24 45
துலாம்
7910
543
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,986,120

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1080
சீட்டிழுப்பு திகதி: 2020.10.23
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 80,524,355/-
வெற்றி இலக்கங்கள் 06 44 50 52 R

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.23
சீட்டிழுப்பு இல.: 3410
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,306,250.10
வர்ணம் : ஆரஞ்சு
வெற்றி இலக்கங்கள் 03 13 43 52 Z
8025

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1254
நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 23.10.2020
தினம் வெள்ளிக்கிழமை
O 44 51 67 69
51,181,811.60
SUPER 500 5 4 7 0

ஜய
641
23.10.2020
F 06 26 69 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,906,130
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# சர்வாதிகாரத்தை நோக்கிய அரசின் நகர்வே 20 ஆவது திருத்தம்

## சபையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

சர்வாதிகாரத்தை நோக்கிய அரசின் நகர்வே 20 ஆவது திருத்தச் சட்டமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

20ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவா தத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன் ன.ணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரை யாற்றும் பொழுது மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் உரையினையடுத்து எனக்கு உரை யாற்றக் கிடைத்ததையிட்டு நான் மனம கிழ்வடைகிறேன். இதயத்தில் முற்போக் குக் கொள்கைகளைக் கொண்டவராக இருந்த போதிலும், இச்சட்டமூலம் இங்கு சமர்ப்பிக்கப்படுகையில், அவர் தவறான வர்களின் பக்கம் அமர்ந்திருக்க வேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது.

சபையின் எதிர்த்தரப்பிலிருந்து பல ரும் இச்சட்டமூலத்தில் உள்ள ஜனநாயக குறைபாடுகள் குறித்தும் அரசின் அதிகா ரம் தனியொருவரின் கைகளில் குவிக்கப் பட்டிருப்பது பற்றியும் விரிவாகப் பேசியி ருக்கிறார்கள். ஆதலால் நான் இத்தி ருத்தச் சட்டமூலம் தொடர்பான விபரங் களைப் பற்றிப் பேசுவதற்கு தேவையி ருப்பதாக எண்ணவில்லை.

ஆனால் இந்நாடு இவ்வாறான நிலை யை ஏன் எதிர்கொள்கிறது என்பது பற்றி நிச்சயமாக நீங்கள் உங்களையே கேள்வி கேட்டுகொள்ளலாம் என்பதிலிருந்து ஆரம்பிக்கலாம் என எண்ணுகிறேன்.

இலங்கையின் அரச கட்டமைப்பானது ஒரு தொடர்ச்சியான செயல்முறைகள் மூலம் ஒரு கட்டமைப்பு மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்தச்சபையில் வெளிப்படுத்த விரும்புகிறேன். இலங்கை அரசில் நடை பெற்றுவரும் கட்டமைப்பு மாற்ற ங்கள் ஒரு குறித்த செல்நெறியிலேயே நகர்வதை இன்று இங்கு நடக்கும் நிகழ்வுகளும் மீளவும் உறுதிப்படுத்துகிறது.

சிங்கள பௌத்தரல்லாதவர்களை, குறிப்பாக தமிழ்தேசத்தை எவ்வாறு இந்த நாடு நடத்தியது என்பதும் இலங்கை ஒரு பன்மைத்துவம் கொண்ட நாடு என்பதை அங்கீகரிக்க தொடர்ச்சியாக மறுதலித் தமையும், குறிப்பாக இங்கு சிங்கள தேசம் தமிழர் தேசம் ஏன் முஸ்லிம்களை கூட தேசமாக அங்கீகரிக்க மறுத்து பன்மைத் துவத்தை நிராகரிக்கும் மனோநிலையும் தான் எம்முன்னே இன்று ஒரு பூதமாக எழுந்து நிற்கின்றது.

இந்த மறுதலிப்பும் பன்மைத்துவத்தை ஏற்றுக்கொள்ள தொடர்ச்சியாக மறுத் தமையும் அனைத்து அதிகாரத்தையும் தனி ஒரு இடமாக மத்தியினுள் மையப் படுத்தும் சிந்தனைபோக்குத்தான் இந்த பூதத்தை இங்கு இன்று உருவாக்கி விட்டிருக்கின்றது என்பதை நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் இந்த சபையில் வெளி ப்படுத்துகிறேன் என்றார். (ம-03)

# குடத்தனை மேற்கு பகுதியில் ஒருவர் சடலமாக மீட்பு

## பொலிஸார் மிரட்டியதால் விபரீத முடிவு எடுத்தாரா?

(கரணவாய்)

வடமராட்சியில் குடத்தனை மேற்குப் பகுதியில் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர் ந்த அரிச்சுணன் சிவகரன் (வயது- 43) என்பவராவார். மேற்படி நபர் குடத்தனை மேற்கு மணற்காட்டு சந்திப்பகுதியில் தண்ணீர் தாங்கி ஒன்று அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இவர் சில தினாங்களுக்கு முன்னர் விடுமுறையில் வீட்டுக்கு சென்றுவிட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்நி லையில் தண்ணீர் தாங்கி அமைக்கும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் தொட்டி அமைப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் காணாமல் போனதாக தெரிவித்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை (22) மாலை மரணம டைந்தவரை பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு பொலிஸ் விசாரணையின் போதும் அவரை பொலிஸார் தாக்கியதாக மரணமடைந்தவர் தமக்கு தொலை பேசியில் அறிவித்ததாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் படவில்லை என தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அதனை உடனடியாக பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு உறு திப்படுத்த முடியவில்லை.

இந்நிலையில் நேற்று வெள்ளிக் கிழமை (23) காலை 9 மணிக்கு மீண் டும் விசாரணைக்கு வருமாறு அழைக்கப் பட்டதாக அவர் தொலைபேசி வழியாக உறவினர்களுக்கு தெரிவித்துள்ளனர். அங்கிருந்த பொருட்கள் காணாமல் போன மைக்கு தனக்கும் எவ்வித தொடர்பு மில்லை எனவும் தொழில்நுட்ப உத்தி யோகத்தருக்கு வேறு ஒருவருக்கும் தொட ர்பு இருப்பதாக அவர் தொலைபேசி வ்ழி யாக தெரிவித்ததாக அவரின் உறவின ர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா சம்பவ இடத்திற்கு சென்று இருந்தார் எனினும் அவரின் உறவினர் கள் இச்சம்பவத்தில் சந்தேகம் கொண் டதை அடுத்து விசாரணை மேற்கொள்ள முடியாத நிலையில் பருத்தித்துறை நீதிம ன்றத்தினால் விசாரணைகளை மேற் கொள்ளுமாறு தெரிவித்து விட்டு சென்று விட்டார். (ம-03,60)

# விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை- மட்டக்களப்பு பிரதான வீதி உப்பாறு இராணுவ முகாமி ற்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந் துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரி வித்தனர்.

கிண்ணியா, வான் எல பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

குறித்த சிறுவன் சக நண்பருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து இராணுவ முகா முக்கு முன்னால் போடப்பட்டிருந்த கம்பியில் சிக்குண்டு கழுத்து வெட்டப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக கிண்ணியா பொலி ஸார் தெரிவித்தனர். (ம-03)




அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2022ல் நீங்களும் அமெரிக்காவில்.

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்

விண்ணப்ப முடிவு திகதி 10-11-2020

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

V2 Travels www.facebook.com/v2tandt

காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், ராச வீதியில் மெயின் றோட்டுடன் 6 பரப்பு ( சீர் செய்யப்பட்ட ) காணி விற்பனைக்கு உண்டு.

1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

தரகர் தேவையில்லை.

தொடர்பு கரு :

077 805 1655

076 640 0974, 076 888 4625 (4453)

காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், வசாவிளான் , குட்டிய புரம் அபிராமி அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்துக் கொடுக்கப்படும்.

ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் ரூபாய் (300,000.00).

தரகர் தேவையில்லை.

தொடர்பு கரு : (4453)

077 998 6806

077 190 4814

IT CLASSES ( ONLINE )

உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் தொழில் செய்வோர் வீட்டிலிருந்தவாறு குறைந்த கட்டணத்தில் தகவல் தொழில்நுட்பப் பட்டப்படிப்பைத் தொடர விரும்புகி றீர்களா?...

கொழும்புப் பல்கலைக்கழக BIT பட்டப்படிப்பானது கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் தமிழ் மொழி மூலமான விளக்கத்துடன் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும்.

விரும்புவோர் 077 669 2873 இலக்கத்திற்கு WhatsApp ஊடாக முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை அனுப்பவும். (4449)

குறிப்பு – அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், விண்ணப்பிக்கும் மாணவர்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

வேலைவாய்ப்பு

யாழில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தளபாடம் செய்யும் நிறுவனம் ஒன்றிற்கு

வேலையாட்கள் தேவை

* காப்பெண்டர்ஸ் (Carpenters)
* ஸ்பிரே பெயின்ரர் (Spray Painter)
* வெல்டிங் (Welding)

தங்குமிடம் வழங்கப்படும். (C-575)

அனுபவத்திற்கேற்ப சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விருப்பமுடையவர்கள் இத் தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

வேலைத்தளம் : கோண்டாவில் 077 788 2333

ஜோதிடம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லிய மாக கணித்துத் தருகின்றோம். (4422)

தொடர்பு - 077 572 9724

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

பிரான்ஸ் / ஜெர்மனி நெதர்லாந்து / சுவிஸ்

1150 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய் ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-555)



நடமாடும் உணவு சேவை

சாயி அப்பாவின் நடமாடும் சைவ, அசைவ உணவு சேவை.

தேவையானவர்கள் முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளலாம்.

மீன் சாப்பாடு - 140 /=

கணவாய்ச் சாப்பாடு - 220/=

கோழிச் சாப்பாடு - 200/=

சைவ சாப்பாடு - 120/= (4451)

தொடர்பு :- 077 979 0899


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.